

தொகுதி - 8 பகுதி - 6

பங்குனி 1 14—3—86

சிவ சிவ

நம்மவர்களே !

கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்
மலரவன் வண்டமிழோர்க்கு ஒவ்வான்--மலரவன் செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்று இவர் செய்யும் உடம்பு.

— ஸ்ரீ குமரகுருபரர்.

பிரம்மனும் படைப்பாளி: கவிஞனும் படைப்பாளி. கவிஞனுக்கு அருள்தரும் கலைமகள் பிரமனின் நாவிலே இருந்தாலும் பிரமன், கலைமகள் அருள்பெற்ற கவிஞர்கட்கு ஒப்பாக மாட்டான். ஏனென்றால் பிரமன் படைக்கும் வெற்றுடம்பு அழிந்து போகும். கவிஞன் படைக்கும் புகழ் நிறைந்த செய்யுட்கள் அழிவதில்லை.

ஸ்ரீ குமரகுருபரர்

ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலை மாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்

உள்ளே :

363

ஆத்திக இதழ்கள்

தமிழகத்தில் ஆத்திகம் வேரூன்றியுள்ளது. மகிழ்ச்சி. ஆனால் அதே நேரத்தில் 'ஆத்திக இதழ்கள் சவலைத்தன மாகவே இருக்கின்றன' என்ற கசப்பான உண்மையையும் மறுக்க முடியவில்லை.

ஆத்திகப் பிரசார இதழ்கள், ஆத்திக விளக்க இதழ்கள் என்னும் இரண்டு வகைகளில் இரண்டாம் வகை இதழ்களே இப்பொழுதைக்கு அதிகமாக உள்ளன. சமய நிறுவனங்கள் நடத்தும் இதழ்கள், தனியார் நடத்தும் இதழ்கள் என்ற வகையிலும் ஆத்திக இதழ்களைப் பிரிக்கலாம்.

சமய நிறுவனங்கள் நடத்தி வரும் இதழ்கள் 'கல்லைப் பிசைந்து கனியாக்கி' என்பதுபோல் நுணுக்கமும் ஆழமும் திண்மையுமுள்ள சமயச் செய்திகளைக் கூடுமானவரை எளிமையாக்கி மக்கள் மத்தியில் வைக்கும் பணியில் ஈடு-பட்டுள்ளன. இந்த இதழ்களை எடுத்துப் படிப்பதைக் காட்டிலும் மதித்துப் போற்ற முடியும்!.

மகனுக்கு எதைக் கொடுக்க வேண்டும் என அறிந்து கொடுப்பவள் தாய்! கேட்டதை எல்லாம், கேட்காததையும் ஊற்றிக் கொடுத்து விடுபவள் யாராக இருப்பாள்?

பக்திப் பசிக்குச் சத்துணவு கொடுக்கும் பணியைத்தான் ஆத்திக இதழ்கள் செய்கின்றன. விபரீதங்களை வெளி யிட்டு மனித மனங்களை வெறிப்படுத்தி விடுவதையும் ருசி என்ற பெயரில் மனித மனங்களைக் கிலேசப் படுத்தி விடுவதையும் ஆத்திக இதழ்கள் என்றுமே செய்ததில்லை! இதழியல் பண்பாட்டை ஆத்திக இதழ்களே பெரிதும் பேணிக் காக்கின்றன!

சமய நிறுவனங்கள் பிரசார நோக்குடன் இவற்றை இலவசமாகவே பலருக்கும் அனுப்பலாமே என்ற யாசக வாதத்தைக் கேட்டதுண்டு. சைவ சமய நிறுவனங்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்கள் இன்று மிக்க ஆரோக்ய

மாக இல்லையென்பது ஒருபுறமிருக்க அப்படி அனுப்பப் பெறும் இதழ்கள் ஆயிரத்துக்குப் பத்துதான் பிரிக்கப்படு கின்றன; ஒன்றிரண்டுதான் படிக்கப்படுகின்றன என்ப தையும் சிந்திக்கவேண்டும்! 'ஆர்வம் உள்ளவர்கட்கு அடக்க விலையில் கிடைக்க வேண்டும்' என்ற கொள்கையில் சமய நிறுவனங்கள் இதழ்களை நடத்துகின்றன.

வியாபார தந்திரங்களைப் பின்பற்றும் சூழலும் கொச்சைத் தனமும் இன்மையினால் இந்தச் சமய நிறு வனங்கள் நடத்தும் ஆத்திக இதழ்கள் நசிந்து விடாமற் பார்த்துக்கொள்வது ஆத்திகர்களின் கடமையாகும்!

ஆத்திக சங்கங்களும் மன்றங்களும் மாதம் ஒருமுறை ஒவ்வொரு சமய இதழை விமரித்துப் பேச-கலந்துரையாட ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

தொழில் நிறுவனங்களை நடத்தும் ஆத்திகப் பெரு மக்கள் சமய இதழ்களுக்குக் கணிசமான அளவுக்கு விளம் பரங்கள் கொடுக்க வேண்டும்.

சமயச் சொற்பொழிவாளர்கள் சமய நிறுவனங்கள் நடத்தும் இதழ்களை விளம்பரப்படுத்திப் பேச வேண்டும்.

அறநிலையத்துறையும் ஒவ்வொரு சமய இதழிலும் நூறு திருக்கோயில் நூலகங்கட்காவது பெற ஆணை பிறப்பிக்க வேண்டும்.

மைய நூலக ஆணைக்குழு, சமய இதழ் வெளிவரும் மாவட்டத்தின் கிளை நூலகங்களின் முழுமைக்கும் பெறு மாறு ஆணை இயற்ற வேண்டும்.

ஐந்து கோடி ஆத்திகர்கள் ஜீவிக்கும் நாட்டில் ஐம்பதுக் கும் குறைவான ஆத்திக இதழ்கள்! போதும்! இவையேனும் கம்பீரமாகப் பவனி வரட்டும்!

சிறுமுயற்சி செய்து, ஆங்கு உறுபயன் கொள்ளப்
பெறும்எனில் தாழ்வரோ? தாழார் ! - அறன் அல்ல
எண்மைய வாயினும் கைவிட்டு அரிதுஎனினும்
ஒண்மையில் தீர்ந்தொழுக லார்!!

— நீதிநெறிவிளக்கம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணியவர்.



பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்,
'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ
**காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள் அவர்கள்**

தில்லையின் சிறப்புக்களுக்கு எல்லை இல்லை!
"பிறக்கமுத்தி ஆரூர்; தொழத்தில்லை: பேறூர்ந்(து)
இறக்கமுத்தி காசினன லே"

என்றபடி திருவாரூரில் பிறந்தால் முத்தி; தில்லையை அண்மித் தொழுதால் முத்தி; காசியில் இறந்தால் முத்தி! பிறத்தலைப்பற்றி இனி நினைத்துப் பயனில்லை. இறுதியில் உள்ளதும் எல்லார்க்கும் சாத்யமாகாது. எல்லாரும் முயன்றால் கைகூடும் எளிய உபாயம் தில்லையைத் தொழுவதேயாகும்.

தில்லைக்குச் செல்கிறான்; ஸ்ரீமந் நடராஜப் பெருமானைப் பார்க்கிறான்; கை கூப்புகிறான். திரும்புகிறான்! அவனுக்கு மோட்சம் நிச்சயம் தானே! அப்படியென்றால் வேறே சாத்திரங்கள், தோத்திரங்கள் திருக்கோயில்கள் இவையெல்லாம் எதற்காக?

விஷயம் அவ்வளவு சுலபமாக இல்லை! காட்சிப் பொருளைப் போல ஸ்ரீமந் நடராஜப் பெருமானைப் பார்த்து விட்டு

வருவது மிகச்சுலபம்! அவனருளே கண்ணுகக் காணு தலும், சித்தத்தை வைத்துச் சேவித்தலும் அவ்வளவு சுலப மாக அனைவருக்கும் கைகூடுவதில்லை!

ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்து சாத்து விகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையுள் தனிப்பெரும் கூத்தின்

வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைப்பது மிகப்பெரு ஞானி யர்கட்கு ஏற்படும் அருளார் அனுபவமாகும். அவர்கட்கு உடனே வரம் கிடைத்து விடும். இனிப் பிறவி இல்லை என்பது அவர்கட்கு அப்பொழுது நிர்த்தாரணமாகத் தெரிந்துவிடும் தொழுததால் முத்தி நிச்சயம் என்று தெரிந்து கொண்டதாலேயே தில்லையில்

இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே

என்றும்,

மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே

என்றும் பாடியருளினர்கள். இந்தவூருக்கு இனி வரமாட் டோம் என்ற நிலையில் புறப்படும்போது அந்தவூரில் வாழ்ந்த வாழ்வின் சுகாநுபவங்கள் சிலவற்றை அசை போடத் தோன்றும்.

தில்லைக்கு வந்து ஸ்ரீமந் நடராஜப் பெருமானை உணர்ந்து நெக்குருகித் தெரிசித்துப் 'பிறவி இல்லை' என்ற வரம்பெற்ருயிற்று. இந்த மானுட சரீரம் இனி வரப்போவ தில்லை என்றதெளிவும் முடிவும் ஏற்பட்டவுடன் 'இந்த சரீரத்தினுலும் ஒரே ஒரு சுகாநுபவம் பெறமுடியு; தில் லைக்கு வந்ததும் தொழுததும் இந்தச் சரீரத்தினுலேதானே?' என்று ஓர் உணர்வு வருகிறது. அதனுலேதான் 'இன்னம்

பாவிக்குமோ இப்பிறவி' 'மனிதப்பிறவியும் வேண்டுவதே' என்ற தொடர்கள் உதயமாகின்றன.

வரம் பெற்ற பிறகு வரும் வார்த்தைகள் அவை. அப்பரடிகளுக்கு குமிழ்சிரிப்புடன் வரம் கிடைத்தது. காண முத்திதரும் தலத்துள், கண்டு தொழுதவுடன் அந்தப்பெருமான் அளிப்பதை வரம் என்றுதான் குறிப்பிட வேண்டும்!

அதைப் பெற்ற இன்னொருவர் அதனை 'வரம்' என்றுதான் குறிப்பிடுகிறார்.

தில்லையில் கண்டு தொழுதவுடன் அப்பரம்பொருள் 'இனிஉனக்குப் பிறப்பில்லை' என்று வரம் கொடுக்கிறது. வரமாயினும் சாபமாயினும் அதன்மேல் ஒரு வேண்டுகோள் வைக்கலாம். அது நீதிமன்றத் தீர்ப்புக்குமேல் ஓர் விளக்கம் கேட்பதைப் போல.

அந்த வரத்தின்மேல் 'பிறப்பு ஒன்று அருள்க'—தில்லையைக் கண்டால்—தொழுதால் முத்தி. வாஸ்தவம் தான். கண்டேன். தொழுதேன். இனிப்பிறப்பில்லை என்று வரம் பெற்று விட்டேன். ஆனாலும் இன்னும் ஒரே ஒரு முறை பிறந்து விடுகிறேன். இந்த வரத்தை அப்படித் திருத்திக் கொடுக்கக் கூடாதா என்று வரம் கொடுத்த பரம்பொருளைக் கேட்டால் கிடைக்காது. பிரமனுலும் அத்திருத்த உரிமை இயலாதது.

சட்டங்கள், சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள் எதையும் பாராமல்'வேண்டியார்க்கு வேண்டியதை'ஈய வல்லவனையே 'வள்ளல்' என்போம். அந்தப் பரம்பொருளையும் வள்ளல் என்றுதான் குறிப்பிடுகிறோம். அந்த வள்ளலாலும் 'இனிப் பிறவி இல்லை' என்று கொடுத்த வரத்திற்குத் திருத்தம் தர முடியாது.

—இப்படி 'இனிப் பிறவி இல்லை'என்பதை 'வரம்' என்றும் 'அந்த வரத்தில் பிறப்பொன்று அருள்க' என்று கேட்

டாலும் அதனைப் 'பிரமனாலும் நிறைவேற்ற முடியாது!' என்று அருளுபவர்கள் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள்.

வரத்தில் பிறப்பு ஒன்று அருள்கெனினும் வள்ளல்
கரத்தில் கபாலத்தைக் காணூப்-புரத்தை
இரும்புண்ட ரீகபுரத்து எய்தினார்க்கு ஈயான்
அரும்புண்ட ரீகத்து அயன்.

என்பது சிதம்பரச் செய்யுட் கோவையின் ஏழாம் பாடலாகும்.

வள்ளல் கரத்தில் இருப்பது பிரம்மகபாலம். சிவபெருமான் தில்லைக்கு வந்தவர்கட்கு-வழிபட்டவர்கட்குப் பிறவி இல்லை என்று வரங்கொடுத்த பிறகு பிரமன் அதைமாற்றித் தர மாட்டான். பிரமன்,சிவன் கையிலுள்ள பிரம்மகபாலத்தைப் பார்த்து இன்னொரு தலை கொய்யப்படுமோ என்று அஞ்சி, வரம்பெற்றவர் எவ்வளவு கெஞ்சினாலும் பிறப்பளிக்க மாட்டான் என்கிறார்.

இப்பாடலுள் 'புண்டரீகபுரம் எனக்குறிப்பிடுவது சிதம்பரத்தை. புண்டரீகம்-தாமரை. 'அரும்புண்டரீகத்து அயன்' வள்ளல் கரத்தில் கபாலத்தைக் காணா, புண்டரீகபுரத்து எய்தினார்க்கு, பிறப்பொன்று அருள்க எனினும் ஈயான்' எனக் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும்.

இப்பாடலும் முன்னைய பாடலின்,செய்யுள் இலக்கணக் குறிப்பையே பெற்றுள்ளது "இதுவும் அவ்வாறே இரு விகற்பமாய் நடத்தலான் இருவிகற்பத்து· ஒராசிடை நேரிசை வெண்பா".

"இதனுள் முதலடி முதற்சீரும் ஈற்றுச் சீரும் முதலெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் ஒரூஉ மோனை' என்ற இலக்கணக்குறிப்பும் இப்பாடலின் அடியிற் காணப் பெறுகிறது.

1 2 3 4

வரத்தில் பிறப்பொன்று அருள்கெனினும் வள்ளல் என ஒன்று நான்கு எண்ணுள்ள சீர்களில் ‘வ’ என்ற எழுத்து மோனையாக உள்ளது. முதற்சீரிலும் நான்காம் சீரிலும் மோனை வந்தால் ஒரூஉ மோனை ஆகும்.

மூன்றும் அடிமோனை பற்றி ஒரு குறிப்பை அறிதல் தகும்.

1 2 3 4

இருப்புண் - ரிகபுரத்து எய்தினார்க்கு ஈயான் என்பது இப்பாட்லின் மூன்றும அடி. இவ்வடியில் ‘இ’ என்ற எழுத்துக்கு அதே எழுத்து மோனையாக வரவில்லை என்றாலு அநுஇன எழுத்து ஆகிய ‘எ’ ‘ஈ’ என்பன மூன்று நான்கு சீகளில் வந்துள்ளன. மோனை ஒன்று மூன்று நான்கு சீர்களில் வந்தமையால் கீழ்க்கதுவாய் மோனை எனப்படும்.

தில்லைக்குச் சென்று சிற்றம்பலம் மேய செல்வனை ஒன்றி நினைந்து தொழுது வரம் பெறுக என ஆன்மாக்கட்கு அறிவுறுத்துவது இத்திருப்பாடல்.

—சிவ சிவ

இம்மை அம்மை யென இரண் டும்மிவை
மெய்ம்மை தானறி யாது விளம்புவர்
மெய்ம்மை யால்நினை வார்கள்தம் வல்வினை
வம்மின் தீர்ப்பர்கண் டீர்வன்னி யூரரே.

உ

சிவ சிவ

காஞ்சிபுரத்தில் தேவாரவிழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்,

'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ

காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

ஆணையின் வண்ணம் நடத்தப் பெறுவது.

குரோதன ஆண்டு பங்குனி மாதம் 16-ம் நாள் [29-3-86] சனிக்கிழமை காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாத சுவாமி பங்குனி உத்திரப் பெருவிழா 14-ஆம் நாள்

திருமுறைவாணர்கள்:-

1. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்

திரு T. M.விசுவலிங்கம் சபாபதி சகோதரர்கள்,
திருவாவடுதுறை

2 கலைமாமணி, தேவார இசைமணி

S. முத்துக்கந்தசாமி ஓதுவார், திருச்சி.
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார் திருச்சி.

3 இன்னிசை மாமணி

திரு சா. திருஞானசம்பந்தன், சீர்காழி.

4 திரு ப. இராமச்சந்திரன், விருத்தாசலம்.

5 சங்கீத பூஷணம்

திரு சா. தண்டபாணி ஓதுவார், சென்னை.

6 திரு S. A கோபாலன் வேய்ங்குழல் சிதம்பரம்

7 திரு கோ. வெங்கட்ராமன், திருப்பனந்தாள்

ஏகம்பத்துறை எந்தாய் போற்றி

R. வெங்கடேசன்
தக்கார்
E. சுந்தரம்
நிர்வாக அதிகாரி

K. Subramania Iyer B. A.
"Thiyagaraja Vilasam"
Triplicane P.O. Madras-5

குறிப்பு ; காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் சன்னதியில் இரவு 8 மணிக்குத் தொடங்கிக் கச்சியேகம்பர் திருவுலாவரும் வீதிகளில் இன்னிசை திருமுறை கோஷ்டி நடைபெறும்.

உ

சொக்கலிங்கம் துணை

Sri Kasi Mutt Religious Charities Tirupanandal

PROPRIETOR & TRUSTEE

H.H. Srila Sri Kasivasi Muthu Kumaraswami Tambiran Swamigal Avergal

திருப்பனந்தாள்

ஸ்ரீவீரியம்மன் பங்குனி உத்திரப்பெருவிழா

16—3—86 முதல் 22—3—86 வரை

திருவிழாக்காலங்களில் திருமுறைப்பணிசெய்யும்
இசைவாணர்கள்

தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்

1. திரு. T. M. விசுவலிங்கம் சபாபதி சகோதரர்கள், திருவாவடுதுறை,
2. திரு. V. தியாகராஜ ஓதுவார், திருப்பனந்தாள்
3. திரு. T. கணேச ஓதுவார் ,,
4. திரு. M. திருநாவுக்கரசு ,,
5. திரு. R சுந்தரவடிவேலு ,,
6. திரு. S. சந்திரசேகரன் ,,
7. திரு S. L. சாமி பிடில் திருச்சி
8. திரு. S A. கோபாலன் வேய்ங்குழல் சிதம்பரம்
9. திரு. கோ. வேங்கடராமன். மிருதங்கம் திருப்பனந்தாள்

Sri Kasi Mutt	உத்திரவுப்படி
Religious charities	சிவ. குஞ்சிதபாதம்
Tirupanandal	மானேஜர்.

குறிப்பு: திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணம் 20—3—86 ஆம் தேதி இரவில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் பங்குனி உத்திரப் பெருவிழாவிலும் இன்னிசைத் திருமுறை கோஷ்டி நடந்தப்பெறும்.

விடையரங்கம்

1. **வினா:** "என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோ இப் பிறவியே"

என்று தில்லைப் பதிகத்தில் கூறிய திருநாவுக்கரசு சுவாமிகள்,

"பழியுடை யாக்கை தன்னில்
பாழுக்கே நீரி றைத்து
வழியிடை வாழ மாட்டேன்"

என்று திருக்கடவூர் பதிகத்தில் கூறுவது எங்ஙனம் பொருந்தும்?

— தி. கோ. பஞ்சாபகேசன், திருவிடைமருதூர்.

விடை :

ஒரு இடத்தில் பிறவியை விரும்பிப் பேசியவர், மற்றோர் இடத்தில் பிறவியை வெறுத்து இழித்துப் பேசியது பொருந்துமோ? என்பது அன்பரின் ஐயப்பாடு. இதற்குச் சற்று விரிவாகவே விடையளிக்கப் பெறுகிறது.

அநாதிகாலமாக ஆன்மாக்கள் ஆணவ மலத்தால் கட்டுண்டு கிடக்கின்றன. கருணைக் கடலான இறைவன் ஆன்மாக்களை ஆணவக் கட்டிலிருந்து விடுவித்தற்காக மாயாமலத்தைக் கூட்டிக் கன்ம மலத்தைப் புசிக்கச் செய்கிறான். அப்போது இறைவன் ஆன்மாக்களுக்கு மாயையால் ஆன சூக்கும உடம்பைக் கொடுத்துப் பிறகு தூல உடம்பை வழங்குவான். ஆன்மாக்கள் சூக்கும உடம்போடு தூல உடம்பில் நுழைவதைப் பிறப்பு என்றும், தூலஉடம்பை விட்டுப் பிரிவதை இறப்பு என்றும் கூறுகிறோம்.

ஆன்மாக்கள் தூல உடம்பைப் பெறும்போது புல் செடி கொடி மரம் நீந்துவன ஊர்வன பறப்பன நடப்பன என்று பல்கோடி சன்மங்களை எடுத்துப் படிப்படியாய் உயர்ந்து மானிடயாக்கையைப் பெறும் மானிடப்பிறவி எடுத்த ஆன்மா தன்னலங்கருதிப் பிறர்க்குத் தீங்கிழைப்பதும் உண்டு; பிறர்நலங்கருதி நன்மை புரிவதும் உண்டு. இங்ஙனம் செய்த நல்வினை தீவினைப் பயன்களை மறுபிறப்பில் நுகரும். நல்வினை மிகுந்தால் சுவர்க்கத்துக்குச் சென்றும், தீவினை மிகுந்தால்

நரகத்தில் சென்றும் இன்பதுன்பங்களை நுகர்ந்து மீண்டும் பிறக்கும். இதனால் ஆன்மாக்களுக்குப் பிறவியானது சங்கிலித் தொடர்போல் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இங்ஙனம் தொடரும் பிறப்புக்களில் ஆன்மாக்கள் பசு புண்ணியத்தோடு சிவபுண்ணியத்தைச் செய்யவேண்டும். சிவபுண்ணியமானது அதிபுத்தி பூர்வம், புத்திபூர்வம் விசேடம் என மூவகைப் படும். அதிபுத்திபூர்வம் என்பது கருத்தின்றித் தற் செயலாய்ச் செய்வதாகும். திருமறைக்காட்டில் கருவறையில் இருந்த விளக்கின் எண்ணெயைக் குடிக்கப்போன எலி, தற்செயலாகத் தூண்டிவிட்டது இதுபோன்ற செயல்கள் எல்லாம் அதிபுத்தி பூர்வ சிவபுண்ணியமாகும். அச்சிவபுண்ணியம் செய்த எலி மீண்டும் பிறவி எய்தி மாவலிச் சக்கரவர்த்தியாக வாழ்ந்தது. இதனால் அபுத்திபூர்வச் சிவபுண்ணியத்தாலும் பிறவி அருது என்பது விளங்கும்.

புத்தி பூர்வம் என்பது "இன்னது செய்தால் இன்னபலன் கிட்டும்" என்பதை அறிந்து அக் கருத்தோடு செய்யும் செயலாகும். திருவலகிடுதல் திருமெழுக்கிடுதல் முதலான சரியையும்; சிவபூசை புரிதலான கிரியையும், பிராணயாமம் முதலாயினவற்றால் சமாதி கூடும் யோகமும் ஆகிய மூன்றும் புத்திபூர்வமான சிவபுண்ணியங்களாகும். இப்புண்ணியங்களைச் செய்யும் ஆன்மாக்கள் சாலோகம் சாமீபம் சாருபம் என்னும் பதமுத்திகளைப் பெற்றுப் புண்ணியப் பேற்றை நுகரும், நுகர்ந்தபின் மீண்டும் பிறவி எய்தக்கூடும்,

சரியை கிரியை யோக நெறிகளில் நின்று செய்யும் சிவபுண்ணியங்களைத் தம்முடையவாக்கிக் கொள்ளாமல் சிவார்ப்பணம் செய்து எதிலும் விருப்பு வெறுப்பு இன்றி நிற்பதே விசேடச் சிவபுண்ணியமாகும். இந்த விசேடச் சிவபுண்ணியத்தைச் செய்யும் ஆன்மாக்கள் படிப்படியாக இருவினை ஒப்பும் மலபரிபாகமும் எய்தும், அதன் வாயிலாகத் தூல உடம்பை நிரந்தரமாகநீக்கும். (பிறப்பு அறும்) அத்தோடு சூக்கும உடம்பையும் கழித்து இறைவனது திருவடி நீழலை அடைகிற சாயுச்சியப் பேற்றையும் பெறும்.

இதுவே ஆன்ம வரலாற்றின் சுருக்கச் செய்தி. இவ் வரலாற்றைக் கூர்ந்து நோக்கின் இரண்டு உண்மைகளை அறியலாம். 1. ஆணவமலநீக்கத்தை விளைவிக்கும் பொருட்டாகவே தூல உடம்பு இறைவனால் அளிக்கப்படுகிறது என்பது முதல் உண்மையாகும். அதாவது ஆணவ வலிமை குன்றும்படி விசேட சிவபுண்ணியம் செய்யும் வாய்ப்பு உண்டானால் அந்தப்பிறவி வேண்டப்படுவது ஒன்றே என்பதாகும் 2. மலபரிபாகத்தை நாடாமல் உலக மாயை

யில் மயங்கிப் புண்ணிய பாவங்களை ஈட்டி மீண்டும் பிறப்புக்கு வழி செய்கிற பிறவியாயின் அது வேண்டப்படாத ஒன்றே என்பது இரண்டாவது உண்மையாகும்.

இவற்றுள் முதல் உண்மையைத் தழுவி,

"என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோ இப் பிறவியே"

என்று நாவுக்கரசர் அருளிச் செய்கிறார். [என் அன்பு ஆலிக்கு மாறு—என்னுடைய அன்பு பெருகி அலை வீசும்படி; கண்டு இன்புற—தில்லைத்திருக்கூத்தைக் கண்டு இன்பம்பெற; இன்னம்—இனியும்; இப்பிறவி பாலிக்குமோ—இத்தகையபிறவி எனக்குவாய்க்குமோ இப்பேறு கிட்டினால் பிறவி வாய்க்க வேண்டும்] இதனுள், சிவபுண்ணியம் கிட்டுமாயின் பிறவி வேண்டும் என்பது குறிக்கப்பட்டதை அறியலாம். மற்றும் இக்கருத்தே பற்றி

"இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே"

எனவும்,

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே
வழுவா திருக்க வரம்தரல் வேண்டும்"

எனவும் நாவுக்கரசர் அருளியுள்ளார்.

"யானேதும் பிறப்பஞ்சேன்"

எனவும்.

"மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின்வணங்கவே – அருளு நீ"

எனவும் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்.

"தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல் வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்"

என்று சேக்கிழார் அருளியுள்ளார்.

இரண்டாவது உண்மையைத் தழுவி,

"பழியுடை யாக்கை தன்னில்
பாழுக்கே நீர் இறைத்து
வழியிடை வாழ மாட்டேன்"

என்று நாவுக்கரசர் அருளிச் செய்கிறார். [பழியுடை யாக்கை தன்னில்— பழிக்கப்படுவதான இவ்வுடம்பில், பாழுக்கே நீர் இறைத்து—சிவபுண்ணியங்களைச் செய்யாமல் உலக போகத்திற் காகவே வருந்தி உழைத்ததால்,வழியிடைவா ழமாட்டேன்-சிவநெறிக் கான வாழ்க்கையை வாழாமற் போனேன்.] ஈண்டு சிவநெறியை விட்டு அவநெறியிலே வாழ்ந்தேன் என்று குறிப்பது, பிறர் நிலையைத் தன்மேல் ஏற்றிக் கூறிக்கொண்ட தாகும்: எங்ஙனமாயினும் ஈண்டுப் பிறவியை வேண்டாமென்று வெறுத்துக் கூறியது சிவபுண்ணியம் செய்யாத அவல வாழ்வு பற்றியே என்பது உணரத்தக்கது.

மற்றும் இக்கருத்தே பற்றி,

"மணம்என மகிழ்வர் முன்னே
மக்கள்தாய் தந்தை சுற்றம்
பிணம்எனச் சுடுவர் பேர்த்தே
பிறவியை வேண்டேன் நாயேன்"

எனச் சுந்தரரும்,

"தவமே புரிந்திலன் தண்மலரிட்டு
முட்டா திறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினையேன்"

என மணிவாசகரும் அருளிச் செய்துள்ளனர்,

முடிவு: எனவே தில்லைப்பதிகத்தில் பிறவியை விரும்பிப் பேசிய தற்கும். திருக்கடவூர்ப் பதிகத்தில் பிறவியை வெறுத்துப் பேசிய தற்கும் வெவ்வேறு காரணங்கள் இருத்தலின் அங்ஙனம் நாவுக்கரசர் கூறியன முரண்படா; பொருத்தமுடையனவே ஆகும்.

2 வினா: "நோதங்கம் இல்லாதார் நாகம் பூண்டார்"
என்னும் பந்தணை நல்லூர்த் தாண்டகத்துள்
குறிக்கப் பெற்ற நோதங்கம் ஏது?

— தி-கோ. பங்சாபகேசன், திருவிடைமருதூர்

விடை: நோதங்கம் இல்லாதார் என்ற தொடர் சிவ பெருமானைக் குறிக்கிறது. இதனுள் அங்கம் என்ற சொல் உடம்பு என்று பொருள்படும் அங்கம் என்னும சொல்லுக்கு முன் நோது என்னும் அடைமொழி வந்துளது. இந்த அடைமொழிக்கு உரிய பொருள் யாது என ஆராய வேண்டும்.

மக்களுக்கு உரிய உடம்பு மாயா காரியத்தால் ஆனது. இது வருத்தத்தை விளைவிப்பது ஆனால், இறைவனுக்கு, உரிய திருமேனி மாயா காரியத்தால் ஆனதன்று; அவனது திருவருளால் ஆனது; வருத்தத்தை விளைவிக்காது. எனவே, வருத்தத்தை விளைவிக்கும் மாயா காரிமான உடம்பைப் பெருதவர் என்பதைத் தான் நோதங் கம் இல்லாதார் என்ற தொடரால் திருநாவுக்கரசர் கூறுகிருர்.

எனவே "நோது" என்னும் அடைமொழி ,'நோவது என்னும் சொல்லின் மருவு என்பது புலப்படும். யாவது என்பது யாது என மருவுவதைப் போன்றது, இந்த மருஉ. நோவது— நோது — என்பது வருத்துவிப்பது எனப் பொருள்படும்.

முடிவு: நோது அங்கம் இல்லாதார் என்பதற்கு வருத்து விப்பதான மாயாகாரியமான உடம்பைப் பெருதவர் என்று பொருள் கொள்ள வேண்டும்.

3. வினு: உரைமாலை எல்லாம் உடைய அடி என்னும் திருவதிகை வீரட்டானத்துத் தாண்டகத்துள் குறிக்கப் பெற்ற "அரை மாத்திரையில் அடங்கும் அடி" என்பது எதனைக் குறிக்கிறது?

— தி. கோ.பஞ்சாபகேசன், திருவிடைமருதூர்.

விடை: இறைவன் சர்வ வியாபகன். அவனது வடிவத்துக்கு அளவில்லை. அவனது சோதி மணிமுடி சொல் இறைந்து நின்ற தொன்மை உடையது என்றும், பாதம் இரண்டும் பாதாளம் ஏழினும் கீழ்ப் போயின என்றும் மணிவாசகர் குறிப்பார். அப்படி அளவிடற் கரிய அடியை "அரை மாத்திரையில் அடங்கும் அடி" என்று நாவுக் கரசர் குறிப்பதன் குறிப்பு என்ன என்பது வினு.

இப்படியன் இந்நிறத்தன் இவ்வணத்தன் என்று இறைவனை எழுதிக்காட்ட முடியாது எனினும். அன்போடு நினைவரது உள்ளக் கமலத்தின் கண்ணே அவர் நினைத்த வடிவோடு விரைந்து வந்து சேர்வான். அளவிடற்கரிய இறைவனது அடி, அன்பர்கள் நினைத்த போது நொடிப் பொழுதுக்குள்ளாக வந்து உள்ளத்துள் அடங்கி விடுவதால் "அரைமாத்திரையில் அடங்கும் அடி" என்ருர் திருநாவுக் கரசர். மாத்திரை — நொடிப் பொழுது, நொடிப் பொழுதும் தேவையன்றி அதற்குள்ளாகவே வந்து விடுவதால அரை மாத்திரை என்ருர்.

இனி அரை மாத்திரை என்பதற்குப் பிரணவகலை என்று பொருள் கூறுவாரும் உண்டு. அரை என்ற அளவுப் பெயரை ? எனக் கேள்விக்குறிப்போல் அடையாளம் இட்டுக் காட்டுவது பழைய மரபு. இந்த அடையாளம் ஓம் என்ற சொல்லுக் கும் அடையாள மாதலால், அரை மாத்திரை என்பது பிரணவகலை என்பர். ஈண்டு மாத்திரை என்பது அடையாளம் எனப் பொருள் படும்.

விடையளித்தவர்: டா. ம. வெள்ளைவாரணம்

— சென்றஇதழ்த் தொடர்ச்சி

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இயற்கை

சொ. இரவி எம். ஏ., எம். பில்,

'தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை!' - குறுந் 226.
கொடுங்கழி மருங்கின் இரைவேட் டெழுந்த
கருங்காற் குருகின் கோளுய்ந்து போகிய
முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை
எறிதிரை தொகுத்த எக்கர் நெடுங்கோட்டுத்
துறுகடற் றலைய தோடுபொதி தாழை
வண்டுபடு வான்போது வெரூஉம் - நற்றிணை - 211.

திருஞானசம்பந்தர் இளங்குழவிதானே! இயற்கையழகில் தன்னை மறந்து நின்றுபாடும் ஆற்றல் இயல்பாகவே உள்ளது.

விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்தம் நகைகாட்டும் காட்சியதே! ...

நீரலையின் ஆட்டம் பாப்டில் தெரிகிறது. திரை அசையால் ஆரம்பமாகும் சீர்கள் – ஒரு நெருங்கிய அசைவைத் தருவது அற்புதம். அருணகிரியாரின் சந்தத்தில் மனம் பறிகொடுத்த காலஞ்சென்ற – 'ஜஸ்டிஸ் மகாராசன்' அவர்கள் சொல்கிறார்கள் ஓர் இன்ப இசை வெள்ளத்தையுண்டாக்கிச் சொற்களை அந்த இசை வெள்ளத்தில் அவர் மிதக்க விடுவார் அல்லது சொற்களை இசையமுதத்திலே முக்கி முக்கி, பிழியாமலே அவற்றைத் தன்பாடலில் பொதிந்து வைத்து விடுவார் - அந்தச் சொற்கள் இன்றும் இசையைச் சொட்டிக் கொண்டே நிற்கின்றன' — (சொல்லின்பம் - வானதி' - 76 – பக் – 6) அப்படி இசை சொட்டும் பாடல்களாக ஞானக்குழந்தையின் பாடல்களும் இருக்கின்றன. திரும்பத்திரும்பப் படித்தால் - நீரலைகளுக்கு நடுவில் நெட்டிதழ்க் கமலத்தில் - நாமும் கண் வளரலாம் – இதனைச் சுவைத்துக் கொண்டே.

உணர்வுமயமான உயர் கவிதை :

கவிதையைச் சுவைக்க ஓர் உணர்வு வேண்டும். கவிதையின் உணர்வையும் சுவைக்க வேண்டும். பொதுவபகச் சொல்வார்கள். கவிஞனின் சொல்லும் அம்பு தான் - இவன் எய்து விடுவான் - அதுவோ-எங்கோ சென்று (மக்கள் உள்ளத்தில்)தைத்துக் கிடக்கும்- இதற்கியைய H. W. Long fellow - வின் கவிதை ஒன்று - கவிதைத் தலைப்பு - 'ஆம் நீங்கள் நினைப்பதுதான்'—

The Arrow and the Song

I shot an arrow into the air,
It fell to earth, I know not where,
For, so swiftly it flew, the sight
Couid not follow it in its flight

I breathed a song into the air,
It fell to earth, I know not where,
For who has sight so been and strong
That it can follow the flight of a song

Long long afterward in an oak,
I found the arrow still u bre ke
And the song, from beginning to end
I found again in the heart of a friend

இதனைத் தழுவி - இப்படிப் பாடத் தோன்றுகிறது.

வேகமான அம்பை விண்ணில்
விரைவுடனே செலுத்தி நின்றேன்;
மேகங்கூடும் வானில் நீந்தி
விரைந்து எங்கோ மறைந்ததே;
ஆசையாகப் பாட்டு ஒன்றை
ஆர்வத்தோடுப் பாடி நின்றேன்;
விசிநின்ற காற்றி னூடே
விரைந்து எங்கோ மறைந்ததே;
பகழி தைத்த மரத்தைப்
பின்னுள் பார்த்து மகிழ்ந்தேன்;
பாட்டை என்றன் நண்பன்
வாயில் கேட்டு மகிழ்ந்தேன்.

ஆகவே, கவிஞனைப் போல் கவிதைகளும் சாகாவரம் பெற்றவை. இந்தக் கவிதைகளில் நிறைந்துள்ள உணர்ச்சி - இயற்கை - இசை இவற்றாலேயே - கவிதைகள் வாழ - கவிஞனும் வாழ்கிறான்.

இயற்கையோடு காதல் :- ஞானசம்பந்தர் காதலுணர்வு ததும்பப் பாடவல்லவர். அதே நேரம் - காதலில் ஒரு கையறவு வந்தால் - அந்த ஏமாற்றத்துடன் கூடிய அறியாமை ஒரு பாடலில் வெளிப் படுகிறது.

கடற்கரை - தழைத்து நிற்கின்றன தாழைகள். நாரையொன்று - கழியிடை கனை கொண்டு - நெடுநேரமாய் - ஒற்றையாய் நிற்கிறது. கால்கடுக்க நின்ற செய்தியைக் காதலிக்குக் கூறுவோம் - என்று திரும்பியது. அருகிருந்த கொழுவிய - வெள்ளைத் தாழைமடல் - துணைவியைப் போன்றே - தோன்ற ஊடலினால் பேசாதிருக்கிறது போலும் என்று புறம்புல்லி மகிழ்ந்தது. இந்த மயக்கம் காதலில் மட்டுமல்ல. கனிந்த தாய்மையிலும் உண்டு. காதல் மயக்கம் இங்கே தாய்மை மயக்கத்தைக் கலிங்கத்துப்பரணி காட்டும்.

'ஏழைநவண் குருகயலே இளம்
பேடை தனதெனக் கருதித்
தாழைவெண் மடற் புல்கும்
தண்மறைக் காடமர்ந் தார்தாமே'' —
அட்டமிடட நெடுங்கழை காணிலெம்
அன்னை அன்னையென் றலும் குழவிய
ஒட்ட ஒட்டகம் காணிலெம் பிள்ளையை
ஒர்தும் ஒக்குமென் றெக்கலைக் கொள்வன' —

முதற்பாட்டில், 'ஏழைவெண்குருகு' — என்பதும், இரண்டாவது பாட்டில். 'ஒக்கலை கொள்வன' — என்பதும் விலைமதிக்க முடியாத சொல்லாட்சிகள். அதே நேரத்தில் அவைகளின் புறம்போன மனத் தினையும் (absent mindedness) நமக்குக் காட்டி விடுகிறார்.

கோலக்காவில் கொழித்த கற்பனை : -

பலகோணங்களில் சம்பந்தர் கவிதைத் திறனைக் காண முடியும் அதில் ஐம்பது விழுக்காடு இயற்கை அழகுதான். சிலவிடங்களில் இயற்கையில் - தமது தற்குறிப்பால் தனியிடம் பெற்று நிற்பர்.

பெண்கள் அகந்தூயராகி - புறந்தூய்மை பெறப் பொய்கையை நாடுகின்றனர். குடைந்து குடைந்து இவர்கள் ஆட இவர்களது விழிக்குத் தோற்ற மீன்கள் - அங்கிருந்து துள்ளிக்குதித்து மடையில் வீழ்ந்தனவாம். இதே கருத்தைப் பரஞ்சோதியார்.

"குரவ வோதியர் கயந்நலே குறுகுமுன் கயலும்
அரவு மாமையு மலவனு மன்னமு மகன்ற
பருவரால்களு மிரிந்தன பகைஞர்மே லிட்டு
வருவ ரேலெதிர் நிற்பரோ வலியிழந் தவரே"

இந்த நான்குவரிப் பாடலே — இத்தெய்வமாக்குழவி ஒருவரியில் —
'மடையில் வாளை பாய மாதரார்

குடையும் பொய்கைக் கோலக்கா' — என்றார்.
"Single line Poetry" — என்பார்கள். என்ன என்ன திண்ணம் இன்பம்.

முடிவுரை ;- சங்க இலக்கிய இயற்கையிலிருந்து மாறி கடவுட் கோட்பாட்டைப் புகுத்திய தேவாரக்கால முவலாசிரியர் இவர் எனலாம். இவருக்கு - இவர் வயதும் - உலாச் செல்லும் வாய்ப்பும்— பெரிதும் உதவின எனலாம்.

அறங்காத்த அரக்கன்

பெ. சொக்கலிங்கம் - கொடுமுடி.

இராவணனுக்கு அறிவுரை கூறி, அவனைக் காக்க முயன்றது, விடணன் பட்டுமன்று. மாரீசன், கும்பகர்ணன், இந்திரஜித்து கூட முயன்றனர். என் செய்வது? விதி கொடுத்த. இராவணன் பட்டனன். நாம் எழுதப் புகுந்தது விடணனைப் பற்றியே. எனினும் தொடர்பு, காரணமாக, ஏனையோர் கூற்றையும் எடுத்துக் காட்டி. வீடணன் செயலை விரிப்போம்.

மாரீசன் :

சூர்ப்பனகை மூலம் சீதையின் அழகைப் பற்றிக் கேட்ட இராவணன், எப்படியாவது அவளை அடைய வேண்டுமென்று எண்ணி, அவளைக் கொண்டு வருதற்கு மாரீசனுகிய மாமனைத் துணைக்கு அழைத்தான். மாரீசனே ராமபாணத்தை அறிந்தவன். எனவே அவன் இராவணனுக்குப் புத்தி புகட்டினன். எடுத்த எடுப்பிலே. "மன்ன, நீ, நின் வாழ்வை முடித்தாய் மதியற்ருய்" என்று இடித்துரைத்தான். "உனக்கு இப்படி புத்தி கெட்டது உன்னலன்று, உனக்கு அழிவுக் காலம் கிட்டிவிட்டது. உன் ஊழ்வினை காரணமாகவே உனக்கு இந்த புத்தி தோன்றியிருக்க வேண்டும். ஏன்? நீ படித்தவன். வேதங்களில் வல்லவன். வேதங்களின் ஒவ்வொரு சொல்லையும் ஆராய்ந்து, அறநெறியை நன்கு உணர்ந்தவன். நீ பெற்றுள்ள செல்வமெல்லாம் அறநெறியிலே பெற்றவை அவற்றை மறநெறியிலே இழக்கலாமா?

திறத்திற னலோ செய்கவ முற்றுத் திருவுற்ருய்
மறத்திற னலோ? சொல்லுதி சொல்லாய் மறைவல்போய்
அறத்திற னலே எய்தினையன்றே! அது நீயும்
மறத்திற னலே பின்னுமிழக்கப் புகுவாயோ!

அது மட்டுமல்லா. "மற்றவர்க்காய் மனைவாழும் தாரங்கொண்டார் ... ... தம்மைத் தருமம் தான் ஈருங்கண்டாய்" பாவங்களிலே மிகக் கொடியது பிறர் மனை நயத்தல். அதைச் செய்பவரைத் தரும தேவதை அறுத்து அழிக்கும். ஆகையால் இது செய்தலைத் தவிர் என்று மாரீசன எத்தனையோ சொன்னன். அவை இராவணன்

செவியில் நுழையவில்லை. இனிக் கும்பகர்ணன் கூறியதைப் பார்ப்போம்.

கும்பகர்ணன் :

சீதையைத் தேடி வந்த அனுமான். அசோகவனத்தை அழித்து, பல அரக்கர்களையும் கொன்று இலங்கையைத் தீ வைத்துக் கொளுத்தி, நாசம் செய்துவிட்டு, எல்லோரும் காணவே கடலைத் தாண்டிப் போய்விட்டான். இராவணனுடைய மானம் போய் விட்டது. மிகவும் துக்கப்பட்டு, அமைச்சர்கள், சேனபதிகள், அந்தரங்க உறவினர்கள் கொண்ட சபையைக் கூட்டி, தன் வருத்தத்தைச் சொல்லி, இதற்கு என்ன செய்யலாம் என ஆலோசனை கேட்டான்.

சுட்டது குரங்கு எரிசூரை யாடிடக்
கெட்டது கொடிநகர் கிளையும் நண்பரும்
பட்டனர் பரிபவம் பரந்த தெங்கும்
இட்ட இவ்வரியணை இருந்ததென்னுடல்.

ஒரு குரங்கு, என் நகரைச் சுட்டுச் சூரையாடி விட்டதே! என் சுற்றத்தாரும், நண்பரும் கொல்லப்பட்டனரே! எனக்கு அவமானமாயிருக்கிறது. இந்த சிம்மாசனத்தில் உயிரில்லாத என் உடல் தானிருக்கிறது. அந்தக் குரங்கைப் பிடித்துக் கொன்றோம் என்ற பெயர்கூட இல்லையே! நான் உயிரோடு இருந்து என்ன பயன்? நமது புகழ் அழிந்துவிட்டதே! என்று வருத்தப்பட்டான். அதற்கு கும்பகர்ணன் சொன்னன். "அண்ணு! நீ, பிரம்மாவினுடைய குலத்தில் பிறந்து, ஒப்பற்றவனுக இருக்கிறுய். ஆயிரம் சாகைகள் உள்ள சாமவேதம் உனக்கு மனப்பாடம். வேதங்களில் பொருளை உணர்ந்தவன். அறிவு மிக்கவன். அப்படியிருக்கிற நீ நெருப்பின மேல் (சீதை மேல்) ஆசை வைத்தாய். உனக்கு இன்னும் வருமோ.

நீ அயன் முதற்குலம் இதற்கொருவனின்றுய்
ஆயிரம் மறைபொருள் உணர்ந்து அறிவமைந்தாய்
தீயினை நயப்புறுதல் செய்வினை தெரிந்தாய்
ஏயின உறத்தகைய இத்துணையவேயோ!

உன்னுடைய நகரம் அழிந்து விட்டது கண்டு, உன்னுடைய ஆட்சியே அழிந்து விட்டது என்று, வருத்தப்படுகிறுயே. வேறு ஒருவனுடைய மனைவியை ஆசைப்பட்டு, அவளைக் கவர்ந்து வந்து ,சிறையில் வைத்திருக்கிறுயே, அது உனக்கு அவமானமாய் இல்லையோ? அது நல்ல செயலோ? பாவிகளில் மிகக் கொடிய பாவிபிறர்மனை நயந்தவன்.

ஒளியம் அமைந்த நகர் தீயுண வுஉளந்தாய்
கோவியல் அழிந்ததுஎன வேறொரு குலத்தான்
தேவியை நயந்து சிறைவைத்த செயல் நன்றோ!
பாவியர் உறும்பழி இதிற் பழியுமுண்டோ?

குரங்கு வந்து' நம்முடைய நகரை அழித்துவிட்டுப் போன, இப்போது தான் உனது புகழ் போய்விட்டது என்று வருந்துகின்றாய். அல்ல, அல்ல, உன் புகழ் முன்னமேயே போய்விட்டது. நீ, வேதங்களில் சொல்லப்பட்ட தர்மத்தை துறந்து, வேறொருவனுடைய மனைவியை விரும்பி, அவளைக் கொண்டுவந்து, என்றைக்குச் சிறை வைத்தாயோ அன்றே அரக்கராகிய நமது புகழ் போய்விட்டது. உனக்கு இன்னும் புகழ் நினைத்துக் கொண்டிருக்கிறாய். அது தவறு. உன் புகழ் அன்றே போய்விட்டது. இந்தஅற்பத்தொழில் செய்தவன், புகழை விரும்புவது அறிவுடைமையோ?

என்றொருவர் இல்லுறை தவத்தியை இரங்காய்
வன்றொழிலாய் மறைதுறந்து சிறை வைத்தாய்
அன்றொழிவ தாயின அரக்கர் புகழ் ஐய
புன்றொழிலர் இசை பொறுத்தல் புலமைத்தோ.

இது மட்டுமன்று. நீ, நல்லோர்கள் செய்யக்கூடிய காரியத்தைச் செய்யவில்லை. நம்முடைய அரக்கர் குலத்திற்கே சிறுமை ஏற்படும்படியான, அதர்மத்தைச் செய்து இருக்கிறாய். "சிட்டர் செயல் செய்திலை. குலச்சிறுமை செய்தாய்" என்று பலவாறு கும்பகர்ணன் இராவணனைக் கண்டித்தான். எனினும் "சீதையை திரும்பக் கொண்டு போய் விட்டால், நாம் எளியவர்களாவோம். எனவே இராமன் மேல் போருக்கு எழுதலே சரி" என முடித்தான்.

விடணன் :

இதனைக் கேட்ட தம்பியாகிய வீடணன், சொல்லத் தொடங்கினான். "அண்ணா! நீயே எனக்குத் தந்தையும் தாயும். அண்ணனும் நீ. நான் வணங்கும தெய்வமும் நீ. எனக்கு எல்லாம் நீயே. உன்னுடைய உயர்வையும் இந்திரனைப் போன்ற பெரிய பதவியையும், ஜானகியின் மேல் வைத்த காதலினால் இழந்துபோவாயோ என்று மனம் நொந்து சொலகிறேன்.

எந்தை நீ யாயும்நீ. எம்முன்நீ. தவ
வந்தனை த தெய்வம் நீ. மற்றுமுற்று நீ
இந்திரப பெரும்பதம இழக்கின்றாயென
நொந்தனன். ஆதலின் நுவல்வதா யினேன்.

நான் நூல்களைக் கற்றவன் அல்ல. அவற்றின் பொருளை உணர்ந்தவனுமல்ல. சொல்வன்மையும் இல்லாதவன்' நான் சொல்வதைக் கேட்டு நீ கோபங் கொள்வாய் என்பது எனக்குத் தெரியும், ஆயினும் நான் சொல்வதை முழுவதும் கேட்டபின் கோபித்துக் கொள்.

கற்றுறு மாட்சியென் கண் இன்றாயினும்
உற்றுறு பொருள் தெரிந்து உணர்தல் ஒயினும்
சொற்றுறு சூழ்ச்சியின் துணிவு இன்றாயினும்
முற்றுறக் கேட்டபின் முனிதி மொய்ம்பினோய்.

நம்முடைய நகரையும் புகழையும், ஒரு குரங்கு சுட்டெரித்து விட்டது என்று சொல்வது அறிவுடைமையாகாது. நீ, இப்போது சிறையில் வைத்திருக்கிறது சானகியெனும் பெயரையுடைய, லோகமாதாவின் கற்பே, நமது நகரைச் சுட்டெரித்தது என்பதே உண்மை.

கோநகர் முழுவதும் நினது கொற்றமும்
சானகி யெனும் பெயர் உலகின் தம்மனை
ஆனவன் கற்பினால் வெந்ததல்லதோர்
வானரஞ் சுட்டதென்று ணர்தல் மாட்சியோ?

அண்ணா! உலகிலேயே, மிக உயர்ந்த பதவியில் இருக்கின்றவர்கள் விழ்வதற்குக் காரணமாயுள்ளவை இரண்டு. ஒன்று பெண். மற்றது மண். இவ்விரண்டைத் தவிர வேறில்லை, பெண்ணின் மேல் வைத்த காதலால் கெட்டவர் அநேகர். அந்தப் பெண்ணாசையில் நீ வீழ்ந்திருக்கிறாய். அதனால் நீயும் அழிவாய் என்பது திண்ணம். அண்ணா! நீ தேவர்களையும் வென்றவனாய் இருக்கலாம். ஆயினும் உனக்கு மனிதனால், குரங்கினால், பெண்ணினால், அழிவு ஏற்படுமென்ற சாபம் இருக்கிறது. இப்போது உனக்கு விரோதமாய் வந்திருக்கிறவர்கள் இராம இலக்குமணராகிய மனிதரும், குரங்குகளும், ஜானகியும் ஆவார்கள். அது மட்டுமன்று. இங்கு இராமனாய் வந்திருப்பவன், சாமான்ய மனிதனல்ல தேவர்களின் வேண்டுகோளால் நாராயணனே உன்னைக் கொல்ல மானிடனாய் வந்துள்ளான்.

"தன்னின் முன்னிய பொருளிலா ஒரு தனித்தலைவன்
அன்னமானுடராகி வந்தவதரித் தமைந்தான்"

ஆதலால், கீழ்மக்களுடைய பேச்சைக் கேட்டு, உன்னுடைய புகழும் செல்வமும் உயர்குலப் பண்பும் அழிந்து போகும்படியும் பழியும் கீழ்மையும் உனக்கு ஏற்படும் படியும் சுற்றத்தாரோடும் மடிந்து போகாது அசைக்கமுடியாத கற்புடைய ஜானகியை, இராமனிடம்

கொண்டுபோய் விட்டுவிடு. அதற்குமேல் உனக்கு வெற்றி தருவது வேறொன்றுமில்லை.

இசையும் செல்வமும் உயர்குலத்தியற்கையும் எஞ்ச
வசையும் கீழ்மையும் மீக்கொளக் கிளையொடு மடியாது
அசைவில் கற்பின் அவ்வளாங் கைவிட்டருறிதி அதன்மேல்
விசைய மில்லெனச் சொல்லினன், அறிஞரின் மிக்கோன்

என்ன செய்வது. இராவணன் காதில் இது ஏறவில்லை அறிவில் படவில்லை. காமமும் கள்ளும் அறிவை மயக்குபவை. கள் உண்டால் மயக்கும். விடணன் வேண்டினன். கெஞ்சினன். காலில் விழுந்தான். இராவணனுக்குக் கோபம் தான் வந்தது. நெருப்பெனப் பொங்கினன் ஏ! விடணா! நீ போருக்குப் பயந்து பேசுகிறாயா அல்லது என்மேல் படை எடுத்து வந்துள்ள மனிதர்களின் மேல் அன்பு கொண்டு சொல்கிறாயா! உன்னை நான் தெரிந்து கொண்டேன். நீ என்னைக் கொன்று விட்டு என் ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கிறாய். அதற்குத் திட்டம் போட்டிருக்கிறாய். உன்னைவிட எனக்கு வேறுபகைவனும் வேண்டுமா? நீ போருக்குப் பயந்து வந்த மனிதரைத் தஞ்சம் அடைந்துள்ளாய். வஞ்சகா! நீ பிறந்த குலத்தை மறந்தாய். உன்னை என்னுடன் வைத்துக்கொண்டு வாழ்வது கொடிய நஞ்சோடு வாழ்வதாகும்.

நண்ணின மனிதர்பால் நண்பு பூண்டனை
எண்ணினை செய்வினை என்னை வெல்லுமாறு
உன்னினை அரசின்மேல் ஆசை யூன்றினை
திண்ணிது உன்செயல் பிறர் செருநர் வேண்டுமோ?

அஞ்சினை ஆதலின், அமர்க்கு மானலை
தஞ்சென மனிதர்பால் வைத்த சார்பினை
வஞ்சனை மனத்தினை பிறப்பு மாறினை
நஞ்சினை யுடன்கொடு வாழ்தல் நன்றரோ?

இப்பொழுதே உன்னைக் கொன்றுவிடுவேன். ஆனால் தம்பியைக் கொன்றான் என்ற பழி எனக்கு வருமே! ஆகையால் உன்னைக் கொல்லாமல் விடுகிறேன். எனக்குப் புத்தி சொல்வதை நிறுத்தமாட்டேன் என்கிறாய். ஓடு வெளியே! சீக்கிரம் இவ்விடத்தை விட்டுச் சென்று விடு. என் கண்முன்னே இனி நிற்பாயானால் கொன்று விடுவேன்.

பழியினை யுணர்ந்து யான் படுக்கிலே னுனை
ஒழிகிலை புகலுதல் ஒல்லை நீங்குதி
விழியெதிர் நிற்றியேல் விளிதியென்றனன்
அழிவினை யெய்துவான் அறிவு நீங்கினன்

ஆம். இராவணனுக்கு அழிவு கிட்டிவிட்டது. அறிவும் நீங்கியது. இராவணனுடைய கோபத்தை வீடணன் அறிவான். அவன் சொன்னதைச் செய்வான். எனவே அங்கு நிற்றல் கூடாது என்று எண்ணி தன்னுடைய நான்கு துணைவர்களோடு எழுந்து, வானில் சென்று நின்றான். ஆனால் போக மனம் வரவில்லை ஐயோ! அண்ணன் அழிவானே! இலங்கை அழியுமே! அரக்கர் கூட்டம் மாய்ந்து ஒழியுமே! ஆகையால் இன்னும் சொல்லிப் பார்ப்போம் ஒருக்கால் திருந்த மாட்டானா என்று நினைத்தான். மீண்டும் சொல்கிறான்.

அண்ணா, நான் சொல்வதைக் கோபிக்காமல் கேள். நீ தவத்தினாலே நீண்ட ஆயுளைப் பெற்றவன் மிகுந்த செல்வத்தோடு இன்னும் நெடுங்காலம் வாழ வேண்டியவன். அப்படி வாழவேண்டிய நீ, உன் உயிரைப் பற்றி சிந்திக்கமாட்டேன் என்கிறாய். கீழ்மக்களுடைய சொல்லைக் கேட்டு அழிந்து போக உடன்படலாமா! தாயைத் தூற்றியவர்களுக்கு நல்ல வாழ்வு உண்டா?

> வாழியாய்! கேட்டியால் வாழ்வு கைம்மிக
> ஊழிகாண்குறு நின் உயிரை ஓர்கலாங்
> கீழ்மையார் சொற்கொடு கெடுதல் நேர்தியோ
> வாழ்வுதான் அறம் பிழைத்தவர்க்கு வாய்க்குமோ?

அண்ணா! எண்ணிப்பார். என்னுடைய சொல்லைக் கேட்கமாட்டேன் என்கிறாய் இராமனுடைய கொடிய அம்புகள் நமது சுற்றத்தாரையும் நம்மைச் சேர்ந்தவர்களையும் கைவேறு, கால்வேறாகத் துண்டித்துச் சித்திரவதை செய்வது நிச்சயம். அதைக் கண்ணால் கண்டபிறகு தான் திருப்தி அடைவாயோ?

> புத்திரர் குருக்கள் நின் பொருவில் கேண்மையர்
> மித்திரர் அடைந்துளோர் மெலியர் வன்மையோர்
> இத்துணைப் பேரையும் இராமன் வெஞ்சரம்
> சித்திரவதை செயக் கண்டு தீர்தியோ

எத்தனையோ வகையில் உனக்கு நல்லது செய்வனவாகிய உறுதிகளைக் கூறி, உன்னையும் இலங்கையையும் காப்பாற்ற முயன்றேன். நீ அவற்றை உணரவில்லை. என்னைக் கோபித்து வெளியே போகச் சொல்லிவிட்டாய். பிடிவாதம் செய்கிறாய். இனிச் சொல்லிப் பயனில்லை இங்கு எனக்கு இனி இடமுமில்லை நான் போகிறேன் அண்ணா! நான் ஏதாவது பிழை செய்திருந்தால் அவற்றைப் பொறுத்துக்கொண்டு என்னை மன்னித்துவிடு.

எத்துணை வகையினும் உறுதி யெய்தின
ஒத்தன உணர்த்தினேன் உணர நிற்றிலை
அத்த என் பிழைபொறுத்து அருளுவாயென
உத்தமன் அந்நகர் ஒழியப் போயினன்

எனச் சொல்லிக்கொண்டு, வீடணன் தனது துணைவர் நால்வரோடும் போய்விட்டான். இனி எங்கே போவது? என்ன செய்வது? என்பதைத் தீர்மானிக்க வேண்டியவனானான். தன் துணைவர்களின் ஆலோசனையைக் கேட்டான். "நான் அறநெறியிலே நிற்பவன். பழிதரும் பாவநெறியை வேண்டேன். ஆதலால் இனி செய்யத்தக்கது யாது? கூறுவீர்" என்றான். முடிவு செய்தார்கள். அறத்தின் நாயகனாகிய இராமனைச் சார்வதே இனி நமக்குக்கடனும் தருமமுமாகும் எனத் தீர்மானித்தனர்.

இது சரியா? இராவணனோடு, இராமன் போருக்கு வந்துள்ள இந்த சமயத்தில் அண்ணனுக்குத் துணையாய் நில்லாமல் அவனைத் துறந்து பகைவனான இராமனிடம் செல்வது துரோகமல்லவா? என நினைத்தல் இயல்பு இப்போது எது செய்யத் தக்கது? தர்மசங்கடமான இந்நிலையில் அதாவது ஒருபக்கம் உடன் பிறந்த அண்ணன் மறுபக்கம் தர்மம் யாரிடம் சேர்வது? தர்மத்தினிடமே சேரவேண்டும் எனக்காட்டுவதே இதிகாசத்தின் லட்சியம்.

உலகில் மனிதனுக்கு லட்சியம் வேண்டும். "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்றார் அப்பர். பெரியோர்கள் லட்சியத்தோடு வாழ்ந்தார்கள். உயிருக்கு இறுதிவரினும் லட்சியம் தவறமாட்டார்கள். அப்படி ஒரு லட்சியத்தோடு வாழ்ந்தவன் வீடணன். தர்மமே அவனுடைய லட்சியம். அடுக்கிய கோடி பெறினும் பெரியோர்கள் அறந் தவறமாட்டார்கள். வீடணன் ஒரு தத்துவஞானி. பிறவியில் அரக்கனாயினும் ஒழுக்கத்தில் உயர்ந்தவன். பிறர்க்கின்னா செய்யாதவன். பிறவிப் பெருங்கடலை நீந்த நிற்பவன். உலகம் தீங்கின்றி வாழவேண்டுமென நினைப்பவன். உயிருக்கு இறுதி வரினும் அறம் தவறான் இவற்றை மனதில் கொண்டே வீடணன் செயல் சரியா அல்லவா என்று முடிவு செய்தல் வேண்டும். தர்மத்தின் தத்துவத்தை உணர்ந்தோரே இதற்கு முடிவு கட்டமுடியும். ஏனையோர் முடிவு செய்யத் தகுதியற்றவர். இதனை ஆராய்வோம்.

பகைவன், படையெடுத்து வந்தபோது, அண்ணனுக்குத் துணையாக இருந்து உயிரைக் கொடுக்காமல், அவனை விட்டு ஓடிப்போய் பகைவனான இராமனிடம் சேர்ந்து கொண்டான். எனவே, வீணாகச்

துரோகி என்பதே அவன் மீதுள்ள குற்றச்சாட்டு. அப்படிக் கூறுபவர்கள் அவனுடைய நியாயத்தைப் பற்றி சிந்திப்பதில்லை. இவர்களை ஒன்று கேட்க விரும்புகிறோம். இக்காலத்தில் ஒரு நாட்டின் தலைவன், காமவெறியால் வேறொரு நாட்டுத் தலைவன் மனைவியைக் கொண்டு வந்து விட்டான் என்றோ அல்லது அவனுடைய சொந்த விருப்பு வெறுப்பினால் பிறனொட்டாளுக்கு ஏதாவது தவறு செய்தான் என்றோ வைத்துக்கொள்வோம் அந்தக் காரணத்தால், வேறொரு நாட்டான் படையெடுத்து வந்தால், இந்த நாட்டு மக்கள், அந்தத் தலைவனை ஆதரிப்பார்களா? போரை ஏற்றுக் கொள்வார்களா? அழிந்து போகவிடுவார்களா? ஒருக்காலும் மாட்டார்கள். எந்தத் தனிமனிதனையும் விட நாடு பெரிது. எந்தத் தனியனிதனுடைய குற்றத்திற்காகவும் அல்லது சந்தோஷத்திற்காகவும் அந்த நாட்டு மக்கள் உயிரைக் கொடுக்கமாட்டார்கள். அவர்கள் துரோகிகளா? அவனைக் கண்டித்து, நாட்டில் அமைதியை உண்டாக்கி மக்களைக் காப்பதே சரி. அதுவே தர்மம்,

இப்போது இராவணன் நிலை இதேதான். காமுகனாகிய அவன். தன் சுகத்திற்காக, காம இன்பத்திற்காக, அந்நியனாகிய இராமன் மனைவியாகிய சீதையை வஞ்சனை செய்து கொண்டுவந்து, அவள் தன் இஷ்டத்திற்கு இணங்காததினால் சிறையில் வைத்தான். அவன் செயலுக்கும் இலங்கையில் உள்ள மக்களுக்கும் நாட்டிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அவன் ஒருவனுடைய இன்பத்திற்காக, அரக்கர்கள் அனைவரும் அழிந்துபோக விடுதல் நியாயமா? இதை, அந்நாட்டின் அறிஞர்கள் அனுமதிப்பார்களா? ஒருக்காலும் மாட்டார்கள் இராவணன் எத்தகையவனாயினும், தனிநபர் தானே? ஒரு தனிநபருக்காக நாடு அழியலாமா? மக்கள் அவன் செயலுக்குத் துணையாகக் கூடாது. எனவே போர் வராமல் நாட்டையும் மக்களையும் காக்கவேண்டி, இராவணனுக்கு வீடணன் புத்தி சொன்னான். அவர்கள் கூற்று முன்னர் எடுத்துக் காட்டப்பட்டது.

> "தீவினை ஒருவன் செய்ய அவனொடும் தீங்கிலாதோர்
> வீவினையுறுதல். ஐய, மேன்மையோ? கீழ்மைதானே?

ஒரு தனிப்பட்டவன் தீங்கு செய்ததினால், அவனொடு தீங்கு செய்யாதோரும் இறந்த போதல் உயர்வுடையதோ? தாழ்மையுடையதோ? என்று வீடணன் கும்பகர்ணனைக் கேட்டான். எனவே, வீடணன், அண்ணனை விட நாடே பெரிது. அவன் ஒருவனுக்காக எல்லோரும் அழியவிடக் கூடாது என்று இராவணனைக் கண்டித்தான். அது சரி. அவன் ஏன் இராமனைச் சரணடைதல் வேண்டும். வேறு எங்காவது போயிருக்கலாம் அல்லவா!

(வளரும்)

சோதனை இல்லை

ம. வே. பசுபதி

வைராக்கியம்

கொண்ட கொள்கையில் அழுத்தம் உள்ள நிலைமையையே வைராக்கியம் என்கிறோம். எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் நிலையின் திரியாது நெடிதோங்கும் நீர்மையே வைராக்கியத்தின் தனி மருகு ஆகும். குருலிங்க சங்கம வழிபாட்டுச் சான்றோர்களாகிய நாயன்மார்கள் கொண்ட வைராக்கியங்களுள் சில இறைவனின் சோதனைக்கு உட்பட்டு உலகிற்குக் காட்டப் பெற்றன. சில அத்தகைய சூழலைப் பெறவில்லை.

1. விறன்மிண்ட நாயனார்

'அடியார் திருக்கூட்டம் பேணாதேகும் ஊரனுக்கும் (சுந்தரருக்கும்), அரவம் புனைந்தார்க்கும் [சிவனுக்கும்] புறகு' என்று உரைத்தவர் இவர். இவர்தம் பக்தி வைராக்கியத்திற்கு இறைவன் சோதனை வைத்ததில்லை. 'அடியாருடன் நாம் உளது' என்றருளிச் செய்தார். சுந்தரர் தொண்டத் தொகை பாடிப் புறகன்மை நாட்டினார். பரமயோகியமையால், திருத்தொண்டத்தொகையுள் புறனின்றமையைக் குறிப்பித்துச் சொல்லாமல் 'விரி பொழில் சூழ் குன்றையார் விறன் மிண்டர்' என்றார்.

2. ஆனாய நாயனார்

ஐந்தெழுத்தை வேய்ங்குழலில் அரிய இசை தாமிழைத்துக் கொன்றைச் சிவனெதிரில் கொடுத்தவர் இந்நாயனார். இசை விரும்பும் கூத்தனாராகிய இறைவன் குழல் கேட்டு உமையம்மையுடன் காட்சி தந்தருள் புரிந்தவர். ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆனாயரைக் குறிப்பித்துரைக்கும் அடியில் குழல் பற்றிக் குறிப்பித்திலரேனும் குழல் ஒலிக்கொத்த வல்லொலி மிகாது 'அலைமலிந்த புனல் மங்கை ஆனாயர்' என அமைத்துரைத்தமை நுய்க்கத் தக்கதாகும்.

3. முருக நாயனார்

திருப்புகலூர் வர்த்தமானேச்சுரத்தில் வழிபட்ட சிறப்பும், திருமடம் அமைத்தமையும், திருஞான சம்பந்தரை உபசரித்தமையையும் முருகநாயனாரின் வாழ்வுச் சிறப்புக்கள் எனச் சேக்கிழார்

அறிவிக்கிறார். சம்பந்தர் மணத்தில் சோதியுட் புகுந்தாரேனும் இவர் இறைவனின் சோதனையுட் புகுந்தாரில்லை.

4. உருத்திர பசுபதி நாயனார்

அருமறைப் பயனாய உருத்திரம் ஓதி, ஆடுசேவடி அழகுற அணைந்தவர் உருத்திரபசுபதி நாயனார். இவர்க்கடுத்த திருநாளைப் போவார்க்குத் தில்லை வாழந்தணரைக் கொண்டு தீயமைத்தளிக்கச் செய்தமையைச் சோதனை என்று கூற இயலாதெனினும் உலகியல் நோக்கிற்கு அதுவுமோர் சோதனையே.

5. குலச்சிறை நாயனார்

நெடுமாறன் வேற்றுச் சமயநெறி பற்றி விடாதிருந்த சிவத்திறமே வைராக்கியத்திற்கு நல்லுதாரணம் இறைவனே இவருக்கு நேராக வைத்த சோதனையேதுமில்லை.

6. பெருமிழலைக் குறும்ப நாயனார்

ஸ்ரீ சுந்தரர் கயிலாயம் அடையச் செல்லுதல் அறிந்ததால் அவர்க்கு முன் கயிலாயம் அடைந்த இவருக்கும் இறைவன் சோதனை வைத்தாரில்லை. திருமூல நாயனாரின் வாழ்விலும் சோதனையில்லை யெனினும் சரீரமே கண்டு தன் கணவன் என மூலன் மனைவி கருதி வருந்தியது இறைவன் திருவுளக் குறிப்பால் நிகழ்ந்ததோர் பெருஞ்சிக்கலே யாகும்.

7. சோமாசி மாற நாயனார்

சுந்தரர் திருவடிகளைப் போற்றும் நியதியால், நலம் பெற்றவர் இவர்க்கும் இறைவன் சோதனை வைத்தாரில்லை.

8. சிறப்புலி நாயனார்

'இன்மையால் இரந்து சென்றார்க்கு இல்லையென்னாதே ஈயும் தன்மையார்' இவர். இவரையொத்த அறப் பெருங்கொடையாளர்க்கு வறுமை நல்கிச் சோதித்த இறைவன் இவருக்கு அத்தகு சோதனை வைக்காததை உளங்கொள்ளவேண்டும். பெருமாக் கோதையாராகிய சேரமான் பெருமான் நாயனார்க்கு ஒரு நாள் திருச்சிலம்போசை கேளாமை ஒரு சோதனையேயாகும்.

9. கணநாத நாயனார்

திருஞான சம்பந்தரின் திருவடிதொழுது உய்ந்தவர் இவர். திருக்கோயிற் பணிகள் அனைத்தும் செய்தவர். அவ்வகையிலும் முட்டுப்படாதே பணிகள் அமைய இறைவன் அருள் செய்தான். கூற்றுவநாயனார்க்குத் தில்லைவாழந்தணர் முடிசூட்ட மறுத்தமை உலகியல் நோக்கிற் சோதனையாகும். நரசிங்க முனையரையர் திருவாதிரை நாளில் அடியார்க்குப் பொன்னளிக்கையில் 'சீலம் சிவனுகிய திருநீறு சேர்த்தான்' வந்ததும் பிற அடியார் அவனை வெறுத்ததும் உளச் சோதனையே ஆகும்.

10. சக்தி நாயனார்

இவரால் பொறுக்க முடியாதது 'சிவனடியாரை இகழ்தல். இவருக்குச் சோதனை கொடுப்பதாயின் இவரெதிரில் சிவனடியாரை இகழச் செய்ய வேண்டும். ஆனால் இவர் சிவனடியாரை இகழ்பவர்களை நாக்கறுப்பதையே வைராக்யமாகக் கொண்டவர் அதாவது சோதனையில் வெல்லும் சாதனையையே அடிப்படை வைராக்யமாகக் கொண்டவர். எனவே அப்பெரியாருக்குச் சோதனை கொடுப்பது இறைவனாலும் ஆகாததாயிற்று. எல்லாம் வல்ல கடவுள் அடியாரின் பேரன்பின் முன் செயலிழக்கும் இயல்பும் உடையவன் தானே!

11. ஐயடிகள் காடவர்கோன்

கவியரங்கேறிய மன்னர் பெருந்தகையாகிய இவர் அரசாட்சியை வெறுத்துத் தலயாத்திரை செய்தவர்.

மற்றும்

எங்கும் தம் இசை நிறுத்திய காரியாரும், மனக்கோயில் உள்ளிருத்தி இறைவர்க்கு அமுதூட்டிய வாயிலாரும், அன்பின் நெறிபிறழா முனையடுவாரும், அடியாருக்குப் பாங்குடை உடையும் கீளும் பழுதில்கோவணமும் நெய்தளித்த நேசநாயனாரும், சோழனாகி பிறப்பில் துயரிலாது தொண்டு புரிந்த கோச்செங்கட்சோழரும் திருநீலகண்டத்துப் பாணனார், சடையனார், இசைஞானியார், ஆகியோரும் இறைவனின் சோதனையுட்படாத திருத்தொண்டர்கள் ஆவர். மங்கையர்க்கரசியார்' மன்னன் வேற்றுச்சமயம் சார்ந்ததனால் உளச்சோதனை பெற்றவர். இறைவனே வைத்த சோதனையேதும் பெற்றவரெனக் கூறவியலாது.

இன்னும்

அறுபத்துமூவரில் இவ்விருபதின்மர் நீங்கலாக எஞ்சிய தனியடியார் நாற்பத்துமூவரில் வைராக்கியத்திற் சோதனைபெற்றோர் பிறவகையிற் சோதனைபெற்றோர் எனப்படுத்துக்காணுதல்வேண் டும்

'இவ்வளவு சாமிப்பைத்யம் கூடாது; கடவுள் சோதிப்பார் என்ற தொடர் பெரியபுராணம் படித்தவர்கள் பேசக்கூடியதன்று. கடவுள்யாரைச் சோதிப்பார்: யாரைச்சோதிக்காமல் ஆட்கொள்வார் என்பது நம் அளவைக்கு உட்பட்டதன்று" என்பதும் பெரிய புராணத்தைப் படிப்பதின் பயன் ஆகும்.

ஆலயபூஜைப் படிக்காசு நிதி

நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

முன் இருப்பு	25264—00
அப்பு, துர்காகுடில் குடந்தை.	5—00
சு. ஜெகதாம்பாள், திருப்பனந்தாள்.	3—00
கைலாசம், உக்கரை.	5—00
S கிருஷ்ணமூர்த்தி, திண்டுக்கல்.	2—00
V. தாயுமானவ முதலியார், திண்டுக்கல்	5—00
ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள், பாண்டிச்சேரி.	10—00
குருஞானசம்பந்தர் பணிமன்றம், மயிலாடுதுறை.	5—40
ஆக	25 299—40
தலச்சங்காடு ஸ்ரீ தங்காரண்யேஸ்வரர் ஆலய செலவு	89—00
சேங்கனூர் ஸ்ரீ சற்குணேஸ்வரர் ஆலய செலவு	51—00
கும்பகோணம் ஸ்ரீ பாணபுரீஸ்வரர் சுவாமி கோவில் செலவு	75—00

திருநாவுக்கரசர் தேவாரம்
"பாடியவாறு அட்டவணை"

தொடர் எண்	திருத்தலமும் பாடிய இடமும்	பெரியபுராணச் செய்யுள் எண்	பதிக முதற்குறிப்பு
44.	நாலூர் பாடி	216—	... ...
45	திருச்சேறை பாடி	216—	பெருந்திரு
	,,		—பூரியாவரு
46	குடவாயில் பாடி	216 —	... ...
	(இடம்பல பாடி)	216	
	(கடுவாய்க்கரைப்புத்தூர்)	216—	(ஒருத்தனை)
47	திருநறையூர் பாடி	216—	... ...
	[திருவாஞ்சியம் அணைந்தார் 216]		
48	பெருவேளூர்		
	பணிந்தேத்தி	217—	மறையணி நாவி
	[பதிபிறவும்... விளமருடன் சென்றிறைஞ்சி 217]		
49	திருவாரூர்		
	எயிற் புறத்தே அடியார் வரவேற்றபோது	219-20—	குலம்பலம்பா
	[தேவாசிரியன் முன் இறைஞ்சி 220]		
	திருமுன் போற்றித்திருத் தாண்டகம் புனைந்து	222—	கற்றவர்கள் உண்ணும்
	கலைப்பதிகம் துதித்து	223—	"காண்டலே கருத்தாய்"
	(திரும்பி வரும்போது தேவாசிரியன் முன்பாடியது)	224—	மெய்யெலாம்
	ஊரில் தங்கி...ஏத்திப்பரவி	225—	... ...
	காலங்களில் கும்பிட்டு	226—	"பாடிளம் பூதத்தி"
	பதிகம் முதலாயின பலவும் பாடி	226 -	சூலப்படை
	,,		- படுகுழி
	,,		—குழல்வலம்
	,,		—எப்போதும்

,, —கொக்கரை

,, – கைம்மான

,, =உயிராவண

,, —பாதித்தண்

,, —நீற்றினை

,, – திருமணி

,, —எம்பந்த

,, – இடர்கெடுமாறு

,, – ஒருவனாய்

திருவிருத்தம் 227 – வேம்பினைப்பேசி

50 திருவாரூர் அரனெறி

போற்றி 227 – எத்தீபுகினும்

,, – பெருங்கைமத

51 வலிவலம்

கழல்பணிந்து 228 – நல்லான்காண்

52 கீழ்வேளூர் 228 – ஆளான

53 கன்றாப்பூர் 228 – மாதினையோர்

. (திருக்கோளிலி) 228—(மைக்கொள்)

,, – (முன்னமே)

. (பேரெயில்) 228—(மறையும்)

[திருவாரூர் தனில் மீண்டும் அணைந்தார் 228]

[திருவாதிரை நாள்...பவனி...சேவித்து 229]

[பதிபிறவும் பணிந்து 230]

(பள்ளியின் முக்கூடல்) 230 – (ஆராத)

[கி பி. 648ல் புகலூர் எல்லையில் நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் சந்தித்தல் 231]

(திருவாரூர் நிகழ் பெருமையை வருத்துரைப்பீர் என்று சம்பந்தர் கேட்டபோது) 234-5 – "முத்துவிதான"

[திருவாரூர் வணங்குவதற்காகச் சம்பந்தர் பிரிதல் 237]

54 திருப்புகலூர்

திருமுன் செந்தமிழ் பாடி 239 – செய்யர்

,, – பகைத்திட்டார்

,, —துன்னக்கோவணம்

55 திருச்செங்காட்டங்குடி 240—பெருந்தகையை

56 திருநள்ளாறு 240—உள்ளாருத

,, —ஆதிக்கண்

57 திருச்சாத்தமங்கை 240— ... ...

58 திருமருகல் 240—பெருகலாம்தவம்

[மீண்டும் திருப்புகலூர் அடைதல் 240, சம்பந்தர் திருவாரூரை வழிபட்டபின் திருப்புகலூருக்கு வருதல் 241, நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் புகலூரில் உடனுறையும் போது சிறுத்தொண்டரும் நீலநக்கரும் அங்குவருதல் 242, அனைவரும் முருகனார் மடத்தில் உடனுறைதல் 243]

[நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் சேர்ந்து தல யாத்திரை செய்தல் 246 முதல் 289]

[அம்பர் வணங்கி 246]

59 திருக்கடவூர்

(திருமுன்)தொழுதேத்தி 247—பொள்ளத்த

,, —மருட்டுயர்

,, —மலைக்கொளானை

[குங்குலியக்கலயனார் மடத்தில் அமுது செய்தல் 247]

60 திருக்கடவூர் மயானம்

இன்னிசைப்பா பலபாடி 248—குழைகொள்காதினர்

,, — ... ...

61 ஆக்கூர்

ஆர்வமுறப் பணிந்து 249—முடித்தாமரை

[பதிபலவும் வணங்கி 249]

(திருமீயச்சூர் இளங்கோயில்) 249—(தோற்றும் கோயிலும்)

(வன்னியூர்) 249—(காடுகொண்டரங்கா)

62 திருவீழிமிழலை

திருமுன் கழல்போற்றி 253—போரானை

ஊரில்தங்கியிருந்தபோது

மொழிமாலைகளும் பலசாத்தி — 262—வான்சொட்ட

" — —என்பொனே

" — —கயிலாய

" — —கண்ணவன்காண்

" — —மானேறு

63 திருவாஞ்சியம்

போற்றி — 263 —படையும் பூதமும்

[புனிதர் வாழ்பதிகள் ஏய்ந்த அன்பினால் இறைஞ்சி இசை வண்டமிழ்கள் புனைந்து 263]

(தலையாலங்காடு) — 263 —(தொண்டர்க்கு)

64 திருமறைக்காடு

(திருக்கதவம் திறக்கும் பொருட்டு) — 268 —"பண்ணின் நேர்மொழி"

பெருமான் முன்பு மொழி மாலைகள் பாடி — 270 —ஓதமாக்கடல்

" — —தூண்டு சுடரனைய

65 திருவாய்மூர்

(ஊர் நோக்கிச் செல்லும்போது 277 —எங்கே என்னை

(ஊர் எல்லையில் இறைக்காட்சி கண்டு) — 281 —"பாட அடியார்"

[கோயில் வலஞ்செய்து போற்றி 282]

[ஊரில் தங்கி மொழி மாலை சாத்தி — 283 — ... ...

[மீண்டும் திருமறைக்காடு வருதல் 283]

[சம்பந்தர் மதுரைக்குச் செல்வதாகப் பிரிதல் 289]

66 திருமறைக்காடு

புனிதர் தமைப்போற்றிசைத்து 290—இந்திரனோடு

" — —தேரையும் மேல்கடாவி

(திருவீழிமிழலைச் செல்லுதற்காகப் புறப்படும்போது) — 291 —கரைந்து கைதொழுது

67. நாகைக்காரோணம்

தமிழ்பாடி	291	ஙவிதாய்
,,		—வடிவுடை
,,		—பாணத்தால்
,,		—பாரார் பரவும்

[பிறவும் பணிந்து ... வண்டமிழ் பாடி 291]

(திருப்பயற்றூர்)	291	—(உரித்திட்டார்)
(திருக்கொண்டீச்சரம்)	291	(வரைகிலேன்)
,,		(கண்டபேச்சினிற்)

68. திருவீழிமிழலை

அரியால் ... இழிந்த கோயில்தனில் மன்னும் பொருளைப் போற்றிசைத்து	292	—பூதத்தின்படை

69 திருவாவடுதுறை

(திருமுன்) இறைஞ்சி	293	—"மாயிரு ஞாலம்"

[பிறவும் பணிகின்றார் 293]

(திருக்கோழம்பம்)	293	—(வேழம்பத்தை)
(நல்லம்)	293	—(கொல்லத்தான்)

70. பழையாறை வடதளி

(சமணர்களைப் போக்கிய பின்பு திருமுன் போற்றி)	299–300	— "தலையெலாம்"

[பொன்னியின் இரண்டு கரையும் ... புக்கு இறைஞ்சித் தமிழ் மாலைகளும் சாத்தி 301]

(கொட்டையூர்)	301	—(கருமணிபோற்)
(இன்னம்பர்)	301	—(விண்ணவர்)
,,		—(மன்னுமலை)
,,		—(என்னிலாரும்)
,,		—(அல்லிமலர்)
(திருப்புறம்பயம்)		—(கொடிமாட)
(திருவிசயமங்கை)	301	—(குசையும்)
(திருவாய்ப்பாடி)	301	—(கடலகம்)
(பந்தணைநல்லூர்)	301	(நோதங்கம்)
(கஞ்சனூர்)	301	—(மூவிலைநற்)
(திருமங்கலக்குடி)	301	—(தங்கலப்பிய)

(தென்குரங்காடுதுறை) 301 –(இரங்கா)
(திருநீலக்குடி) 301 –(வைத்தமாடும்)
(கருவிலி) 301 —(மட்டிட்ட)
(அரிசிற் கரைப்புத்தூர்) 301 —(முத்தூரும்)
(சிவபுரம்) 301 · வானவன்காண்)
(மீண்டும் பழையாறை வந்து)
(திருக்கானூர்) 301 —(திருவின் நாதனும்)
(அன்பிலாலந்துறை) 301 —(வானஞ்சேர்)

71. திருவானைக்கா

சழல் வணங்கி ...
சொன்மாலை பலபாடி 302 —கோனைக்காவி
,, —எத்தாயர்
,, —முன்னானை

72. திருவெறும்பியூர்

இறைஞ்சிப்பாடி 302 —விரும்பியூறு
,, —பன்னிய செந்தமிழ்

73. திருச்சிராப்பள்ளி 302 —மட்டுவார்குழலி

74. கற்குடி 302 —மூத்தவனை

75. திருப்பராய்த்துறை 302 —கரப்பர்

[பதிகள் மருங்குள்ளனவும் கைதொழுது பதிகம் கொடு போற்றி 303]
(கடம்பந்துறை) 303 (முற்றிலா)
(வாட்போக்கி) 303 (காலபாசம்)

76. திருப்பைஞ்ஞீலி

ஊரை நெருங்கும்போது
பாடல் புரிந்து 309 – ... ...
திருமுன் .. தமிழ்மாலைகள் பாடி 310 —உடையர் கோவணம்
,, — ... ...
[மலைகள் பதிகள் பல சென்றிறைஞ்சி ... தமிழ் பாடி 311]
(பாண்டிக்கொடுமுடி) 311 —(சிட்டனைச்)
[வடபால் நோக்கி ... திருவண்ணாமலையை நண்ணினர் 311]

77. திருவண்ணாமலை

மலையைத் தொழுது	312	—பட்டி ஏறுகந்து
திருமுன் கும்பிட்டு ...		
பதிகத் தமிழ்பாடி	313	—ஓதிமாமலர்கள்
,,		—வட்டனைமதி

[இடமெங்கும் ... சென்று வணங்கி 314]
[தொண்டை நன்னாடு எய்தி 315]

78. திருவோத்தூர்

திருமுன் இறைஞ்சி ... தாண்டகங்கள் முதலாக மாலைகள் சாத்தி	316	— ... ...

[பதிகள் பல வணங்கி 317]

79. கச்சி ஏகம்பம்

திருமுன் இறைஞ்சி	324	—"கரவாடும் வன்னெஞ்"
திருக்கோயிலில் உழவாரப்பணி செய்யும்போது எல்லாச் செந்தமிழ் மாலையும் பாடி	325	—நம்பனை
,,		—ஓதுவித்தாய்
,,		—பண்டு செய்த
,,		—பூமேலானும்

[கச்சிமயானத்தை வலங்கொண்டு 325]

80. கச்சிமேற்றளி

பணிந்தேத்தி	326	—மறையது பாடி

[மேற்றளி முதலாம் ஆலயங்கள் ... பணிந்து ... தமிழ் மாலைகள் சாத்தி 326]

81. திருமாற்பேறு

தமிழ்பாடி	327	—மாணிக்குயிர்
,,		—பொருமாற்றின்
,,		—ஏதுமொன்றும்
,,		—பாரானை

[பதிபிறவும் சென்றிறைஞ்சி ... மீண்டும் காஞ்சிபுரம் வருதல் 327]

82. கச்சி ஏகம்பம்

(திருமுன்) பணிந்து	328	—கூற்றுவன் காண்
,,		—உரித்தவன் காண்

83. திருக்கழுக்குன்றம்

கழல் வணங்கி	330	—முளிலை வேல்

[பல பதிகளிலும் தொழுது ... போற்றி 330]

84. திருவான்மியூர்

(திருமுன்) பணிந்து	331	—விண்டமாமலர்

[கோயில் பல சார்ந்து இறைஞ்சி 331]

85. மயிலாப்பூர்

உரைவளர் மாலைகள் அணிவித்து	332	— ... ...

86. திருவொற்றியூர்

எழுத்தறியும் பெருமானைத் தொழுது (கோயிலில் உழவாரப்பணி செய்யும்போது)	335 - 6	—"வண்டோங்கு"
திருவிருத்தங்கள்	337	—செற்றுக்களிற்றுரி
"		— ... ...
திருக்குறுந்தொகைகள்	337	—ஒற்றியூரும்
"		— ... ...
திருநேரிசைகள்	337	—வெள்ளத்தை
"		—ஓம்பினேன்

[அருகுலாம் சிவாலயங்கள் ... இறைஞ்சி 338]

87. பாசூர்

திருமுன் தொழுது		
குறுந்தொகை	340	—"முந்தி முவெயில்"
தாண்டகம்	340	—விண்ணாகி
நேரிசை	340	— ... ...

[அயல் உளவாம் பதி ... வணங்கி ... போற்றி 341]

88. திருவாலங்காடு

திருத்தாண்டகம் முதலாம் தொடை-மாலை பல	342	—ஒன்றா உலகனைத்தும்
"		—வெள்ள நீர்

[பிறபதியும் வணங்கி வடதிசைமேல் வழிக்கொள்வார் 342, திருக்காரிகரை பணிந்து 343]

89. திருக்காளத்தி

(திருமுன்) தாண்டகம் 345 —விற்றாண்டன்

[கண்ணப்பர் திருப்பாதம் சேர்ந்திறைஞ்சி 345]

(காளத்தியில் இருந்தபடி திருக்கோகர்ணம்) 346 —(சந்திரனும்)

[உத்தரத்திசைமேற் போதுவார் 348]

90. திருப்பருப்பதம்

வணங்கி வண்டமிழ் சாற்றி 349 —கன்றினூர்தங்கள்

[தெலுங்கு கடந்து 350, கருநடம் கழிவாக 351, மாளவம் நண்ணி அகன்று, இலாடபூமி இகந்து, மத்தியநாடு எய்தி 352, அன்னநாடு கடந்து கங்கை அணைந்து வாரணாசி பணிந்து கங்கை கடந்து கற்சுரம் முந்தினர் 353]

[கயிலை செல்லும் வழியில் விண்ணில் எழுந்த திருவாக்கின் ஒலி கேட்டு அங்குத் தோன்றிய பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் எழுதல் 371]

91. திருவையாறு

திருக்கோயிலில் கயிலைக் காட்சி கண்டபோது
போற்று தாண்டகங்கள் 381 —வேற்றாகி விண்ணாகி
,, —பொறையுடைய
,, —பாட்டான

காட்சி மறைந்த பின்
அருளிதுவோ எனத்தெளிந்து 383 —(கனகமாவயிர)

காட்சி மறைந்தபின்
கண்டமை பாடுவார் 384 —"மாதர்பிறைக்கண்ணி"

ஐயாற்றில் தங்கி இருந்தபோது
தாண்டகங்கள் 385 —ஆரார்திரி
,, —ஓசைஒலி எலாம்
குறுந்தொகை 386 —சிந்தை வாய்தலும்
,, —சிந்தை வண்ணத்த

நேரிசை	385	—கங்கையை
,,		—குண்டறை
,,		— தானலாது
விருத்தங்கள் பாடி	385	—அந்திவட்டத்
,,		—குறுவித்து
,,		—சிந்திப்பரியன
(பண்)	385	— (விடகிலேன்)
92. திருநெய்த்தானம்	386	—காலனை
,,		— பாரிடம்
,,		-கொல்லியான்
,,		—வகையெலாம்
,,		—மெய்த்தானத்

[நெய்த்தானம் முதலாக மாடுயர் தானம் பணிந்து 386]

(திருக்காட்டுப்பள்ளி)	386	—(மாட்டுப்பள்ளி)
(ஆலம்பொழில்)	386	—(கருவாகி)
93. திருமழபாடி		
(திருமுன்) வணங்கி	386	நீறேறு
,,		- அலையடுத்த
94 திருப்பூந்துருத்தி		
திருமுன்பு ...		
பொய்யிலி ... தாண்டகம்	388	இல்லாத நீர்
குறுந்தொகை	388	—கொடிகொள்
விருத்தம்	389	—மாலினை

[திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்றைத் திருப்பூந்துருத்தியில் கட்டினர் 389]

பூந்துருத்தியில் தங்கி இருந்த போது

பல்வகைத் தாண்டகம்	390	- நேர்ந்தொருத்தி
பரவுதனித் ,,	390	—... ... ...
தானத்தடைவு ,,	390	— பொருப்பள்ளி
திருவங்கமாலை	390	—தலையே நீ
பன்மைத் தொகை — மனம்		—பொன்னுள்

,, —சித்தம் —சிந்திப்பார்
,, —உள்ளம் —சீறலைத்த

[கி. பி.651 ல் திருப்பூந்துருத்தியில் நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் சந்தித்தல் 397]
[ஞானசம்பந்தர் தொண்டை நாட்டு யாத்திரைக்காகப் பிரிதல் 401 நாவுக்கரசர் பாண்டி நாட்டு யாத்திரைக்காகத் தென்திசை நோக்கிச் செல்லுதல் 402]

95. திருப்புத்தூர்

பணிந்தேத்தி 402 —புரிந்தமரர்

96. திருவாலவாய்

திருமுன் 404 —"முளைத்தானை"
ஊரில் தங்கி இருந்த போது
நேரிசை 406 —வேதியா வேத
தாண்டகம் 406 —அண்டங் கடந்த
முதலான தமிழ்பாடி 406 — ... ...

97. திருப்பூவணம்

திருமுன் இறைஞ்சி 407 —"வடியேறு"

98. இராமேச்சரம்

(திருமுன் நின்றுநேரிசை 409 —பாசமும்
முதலான தமிழ்பாடி 409 ... ...

99. திருநெல்வேலி பாடி 411 —

100. திருக்கானப்பேர் பாடி 411 — ... ...

[தானங்கள் எல்லாம் புக்கு ... தமிழ்பாடி 410–11]
[பொன்னி நாடது அணைந்து ... பூம்புகலூர் வந்தடைந்தார் 412]

101. திருப்புகலூர்

வைகு நாளில்
நின்ற திருத்தாண்டகம் 414 —இருநிலனாய்
நீடு தனித் ,, 414 — ... ...
பதிகள் வழுத்து ,, 414 —தில்லைச் சிற்றம்

குறைந்த திருநேரிசை	414	—வென்றிலேன்
ஷை		தம்மானம்
தனித்திரு நேரிசை	414	—தொண்டனேன்
ஷை		—மருளவாம்
ஷை		—கடும்பகல்

முதலான தொடுத்து

நினைந்த திருநேரிசை		—(முத்தினை)
தனிக்குறுந்தொகை		—(ஒன்றுவெண்)
காலபாசக் ,,		—(கண்டுகொள்)
மறக்கிற்பன் குறுந்தொகை		—(காசனை)
தொழற்பாலது ஷை		—(அண்டத்தானை)
இலிங்க புராணக் ஷை		—(புக்கணைந்து)
பாவநாசக் ஷை		—(பாவமும்)
ஆதிபுராணக்குறுந்தொகை		—(வேதநாயகன்)
ஆருயிர்த்திருவிருத்தம்	415	—(எட்டாந்திசை
தசபுராணத்தடைவு		—பருவரை
பாவநாசப் பதிகம்		—பற்றற்றார்சேர்
அறைகூவுந்திருப்பதிகம்		—சிவனெனும்
முதல் பிறவும்		— ... ...
அரம்பையரை நோக்கி	423	—"பொய்ம்மாயப்"
தன்னுடைய சரண் ஆன திருவிருத்தம்	426	—தன்னைச்சரண்
திருவிருத்தம்பல	426	—சாம்பலை
		—விடையும்
		—வெள்ளி
		—பவளத்தட
திருவடி அடையும்போது		—எண்ணுகேன்

[கி பி. 655 ல் சித்திரை மாதம் சதய நாளில் நாவுக்கரசர் சிவானந்த ஞான வடிவேயாகி அண்ணலார் சேவடிக் கீழ் அமர்ந்தார் 427]

★

சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்
"பாடியவாறு - அட்டவணை"

தொடர் என்	தலப்பெயரும் பாடியஇடமும்	தடுத்தாட்கொண்ட புராணச்செய்யுள்என்	பதிக முதற்குறிப்பு

[கி. பி. 807-ல் நம்பி ஆரூரர் (சுந்தரர்) அவதாரம் – 3]

[கி. பி. 810-ல்தெருவில் தேர் உருட்டும் நாளில் நரசிங்க முனையரைய ரால் மகன்மை கொள்ளப்பெறுதல் – 4,5]

[கி. பி. 823-ல் நம்பிஆரூரர் மணப்பருவம் சேர்தல்– 6; திருமணத்தின் போது தடுத்தாட்கொள்ளப் பெறுதல் – 67]

1 திருவெண்ணெய்நல்லூர்
(கோயிலுட்புகுந்ததும் வேதிய ராக வந்தவர் மறைந்து, விடை யின்மேல் காட்சி கொடுத்துப் பித்தன் என்று அடி எடுத்துக் கொடுத்தபோது) 74 —"பித்தாபிறைசூடி"

2 திருநாவலூர்
தேவர்பிரான் தனைப்பணிந்து திருப்பதிகம் பாடினர் 78 — ... ...

3 திருத்துறையூர்
தம்பிரான் முன்னின்று 79 —மலையார் அருவி

[இடம்பலவும் புக்கிறைஞ்சி ... பெண்ணையாறு கடந்து ... திரு வதிகையை அணைந்தார் – 82]

4 திருவதிகை
(சித்தவடமடத்தில் ஆரூரரின் முடிமீது இறைவன் திருவடியை வைத்தபோது) 88 —"தம்மானை அறியாத"
(கெடிலத்தில் நீராடி அங்க ணரை அடிபோற்றி) 90 — ... ...

[கெடிலநதியின் தென்கரைபோய் திருமாணிகுழி அணைந்தார் 90]
[திருமாணிகுழியில் பரம்பொருளை ... தாள் பரவி 91]

5 திருத்தினைநகர்
வணங்கி ... பாடி 91 —நீறுதாங்கிய

6 தில்லை

திருக்களிற்றுப்படி மருங்கு ...
பதிகம் பாடினர் 105-7 — ... ...

[கொள்ளிடத் திருநதி கடந்தார் 110]

7 சீர்காழி

ஊர் எல்லையை வலமாக வரும்
போது இறைக்காட்சி
கண்டு 112–113 —சாதலும் பிறத்தலும்

8 திருக்கோலக்கா

தமிழ்மாலைகள் பாடி 114 – ... ...

9 திருப்புன்கூர்

அடிபணிந்து தமிழ்பாடி 115 — ... ...

[இடம் பல வணங்கி ... காவிரியின் கரை அணைந்தார் 115]
[மயிலாடுதுறை வணங்கி ... அம்பர் மாகாளம் ... பணிந்து 116]

10 திருப்புகலூர்

(திருமுன்) பணிந்தேத்தி 117 — ... ...

11 திருவாரூர்

(அடியார்களால் வரவேற்கப்
பெற்று வீதியூடு செல்லும்
போது) 123 —கரையும் கடலும்
திருமுன் வணங்கித் தமிழ்
மாலை பாட 126 — ... ...
புற்றுளாரைப் பாடி 130 — ... ...
(பரவையாரை மணந்தபின்
ஆரூரில் தங்கியிருந்தபோது)
திருப்பதிகம் பலசாத்தி 182 — ... ...
(தேவாசிரியன் முன்பு நின்று) 202 —"தில்லைவாழ் அந்தணர்"

ஏயர்கோன் கலிக்காம
நாயனர் புராணச்
செய்யுள் எண்

12 திருக்கோளிலி

திருமுன் தொழுது 20 —நீளநினைந்தடியேன்

[பிற பதியும் தொழுது ஆரூர் அணைந்தார் 22]

13 திருவாரூர்

(திருமுன்) இறைஞ்சி ஏத்தி 23 — ... ...

[பதிகள் பல வணங்கி 33]

14 நாட்டியத்தான்குடி

[கோட்புலியார் மனையில் திருவமுது கொள்ளல் – 37]

(கோயில் புக்குத் திருமுன் பணிந்து) 41 —"பூண்நாண்" ஆவது

15 வலிவலம்

(திருமுன்) இறைஞ்சி 43 —ஊனங்கத் துயிர்ப்பாய்

[திருவாரூர் சென்று 44; திருவாரூர்ப் புறம்பு அணிய கோயில்களும் பணிந்து போற்றி ... மீண்டும் ஆரூர் அணைதல் 45]

16 திருப்புகலூர்

திருமுன்பு ... பதிகஇசைபாடி 47 — ... ...

(செங்கல் பொன்னான பின்பு மீண்டும் திருமுன் சென்று வணங்கி) 51 —"தம்மையே புகழ்ந்து"

17 பனையூர்

(ஊரின் புறத்தே திருக்காட்சி கண்டபின் திருமுன்சென்று) 53 —மாடமாளிகை

[ஆரூர் அணைதல் 54; மீண்டும் ஆரூர் மருங்கணிய கோயில் பலவும் இறைஞ்சி ஆரூர் அணைதல் 55]

18 நன்னிலம்

(திருமுன்) வணங்கி 56 —"தண்ணியல் வெம்மை"

19 திருவீழிமிழலை

(திருமுன்) பரவி 59 —நம்பினார்க்கருள்

20 திருவாஞ்சியம்

தாள் பணிந்து 60 —"பொருவனார்"

21 திருநறையூர்

பணிந்தேத்தி 61 —நீரும்மலரும்

22 அரிசிற்கரைப் புத்தூர்

(ஊரில்தங்கி இருக்கும்போது ஒரு நாள்) திருமுன் 62 —மலைக்குமகள்

[பதிகள் பலவும் பணிந்து 62]

23 திருவாவடுதுறை

(திருமுன்) இறைஞ்சி 63 —"மறையவன்"

[பொன்னித் தென்கரைமேல் திகழும் பதிகள் பல பணிந்து 64]

42 திருவிடை மருதூர்

சொன்மலர்கள் பன்னி 65 — ... ...

25 திருநாகேச்சரம்

முதல்வர் திருத்தாள் வணங்கி 66 —"பிறையணி வாணுதலாள்"

[சிவபுரம் வணங்கி 66]
[பதிகள் பிற பணிந்து 66]

26 கலயநல்லூர்

திருமுன்பு பரவி 67 —"குரும்பைமுலை"

27 குடமுக்கு

பணிந்து பாடி 68 — ... ...

28 திருவலஞ்சுழி

வணங்கித் தமிழாற் பரசி 68 — ... ...

29 நல்லூர்

கழல் போற்றி நவின்று 69 — ... ...

[நடுவு நம்பர் பதி எல்லாம் இறைஞ்சி ஏத்தி - 69]

30 திருச்சோற்றுத்துறை

(திருமுன்) 70 —"அழல்நீர் ஒழுகி"

[பதிபலவும் பணிந்து 70; கண்டியூர் பணிந்து, திருவையாறு வணங்கி, பூந்துருத்தி இறைஞ்சி, திருவாலம்பொழில் தாழ்ந்து 71]

31 திருமழபாடி

திருமுன் பணிந்து 73 —"பொன்னார் மேனி"

[பொன்னிக்கரையின் இருமருங்கும் பணிந்து 74]

32 திருவானைக்கா

சேவடிக்கீழ் விழுந்தெழுந்து 75–6 —"மறைகளாயின"

[கோயில் எம்மருங்கும் சென்று ... போற்றி 78]

உ

ஆயுள் சந்தா செலுத்தினுல்

ஓர் அன்பளிப்பு

ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு

ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினுல்

ரூ. 55 மதிப்புள்ள

கந்தர்கலி வெண்பா

இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய
அரிய பாராயண நூலாகிய கந்தர்கலி வெண்பா
பிரபல இசையறிஞர் சேலம்
டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்
இனிய குரலிசையுடன் L. P. இசைத்தட்டாக
வெளியிடப்பெற்றுள்ளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத் தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.
அஞ்சல் செலவு ரூ. 7—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ. 25-ம் அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி இசைத்தட்டைப் பெறலாம்.

நி. ஆ-ர்.

'ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். T. N. / KMB / 12.

ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

ஆயுள் சந்தா	(உள்நாடு)	ரூ 125-00
,,	(வெளிநாடு)	ரூ 125-00
ஆண்டுச்சந்தா	(உள்நாடு)	ரூ 10-00
,,	(ஸ்ரீலங்கா)	ரூ. 13-00
,,	(வெளிநாடு)	ரூ. 15-00

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். "ஸ்ரீகுமரகுருபரர்'
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள். 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி அச்சிடுபவர் முத்து. மெய்கண்டதேவன், ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள்

Posted at Sub-Post Office at Tirupanandal
612504

Licence No. 01. Licensed to Post without Prepayment,

திரு.

L 23 கம்பன் கழகம்,
கம்பன் மணி மண்டபம்,
காரைக்குடி-2. 623002